நான் எம். ஜீ. ஆரை
பின்பற்றி அவரை
போல் மக்களுக்கு
உதவி செய்ய விரும்பினேன்

— வாமதேவன் தியாகேந்திரன்
தொழிலதிபர்



பக்கம் 02 தேன் பொழுது

உள்நாட்டில வேலை
செய்யவும் தாங்களாக
புதிசா தொழில்துறைகளை
உருவாக்கிறதுக்கும்
இளஞ்சந்ததியள் முன்வர வேணும்.



பக்கம் 01 காலத்துக்கேற்ற கல்வி

கூழுக்கும் ஆசை
மீசைக்கும் ஆசை.
குப்புற விழுந்தாலும்
மீசையில் மண்
முட்டேல்லை.



பக்கம் 32 மீசையும் ஆசையும்

# சிரித்திரன்

சித்திரை 2021 நகை 33 சுவை 370

SIRITHTHIRAN Est.1963




## சந்தியடிச் சமாச்சாரம்

## குரக்கன் புட்டு

## சுருட்டுக்கும் அறிமுக விழா

ISSN 2773-7101

ரூபா 95.00

செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

siriththiran.com




# சசிகா லேணர்ஸ்

அரச அனுமதி பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை


# THE SASIKA LEARNERS

Government Approved Driving School

L LEARNING DRIVER

விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்....

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
021 226 0999 / 071 775 0999
sasikadrivingschool@gmail.com
www.sasikalearners.com



தலைமைக் காரியாலயம் 57 வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578 021 221 7678 077 614 0361 0777 226 247

கிளைகள் : யாழ் மத்தி மல்லாகம் சங்கானை யாழ்ப்பாணம் வேலனை பண்டத்தரிப்பு காரைநகர் சாவகச்சேரி

# அண்ணா

அண்ணா EXPRESS Courier Services

உள்நாடு, வெளிநாடுகளுக்கான பொதிகள் மற்றும் பணப்பரிமாற்ற சேவை...




யாழ்ப்பாணம் | வேலணை | சங்கானை | ஆவரங்கால் | குப்பிளான் | சங்கத்தானை |
வட்டுக்கோட்டை | மல்லாவி | புதுக்குடியிருப்பு | கல்வியங்காடு | கரடிபோக்கு |
கிளிநொச்சி | முல்லைத்தீவு | கனகராயன்குளம் | மன்னார் | வவுனியா | கொழும்பு |

967. காங்கேசன்துறை வீதி, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்.
070 330 5500 | 075 330 5500 | 021 221 5656 | 077888938


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்துக்கேற்ற கல்வி




இண்டைக்கு உலகம் எவ்வளவோ மாறிப்போச்சுது. இப்ப எல்லாம் நாளுக்குநாள் புதுசா கண்டுபிடிக்கிறதும் அதால உருவாகிற தொழில் முயற்சிகளும் பொருளாதாரத்தை எங்கையோ கொண்டு போட்டுது. அதுகளுக்காக அந்தத்துறைகளில வேலை செய்யிறதுக்கு ஆற்றல் உள்ளவர்களை உருவாக்கிற முயற்சியா புதுக் கல்வித்திட்டங்களையும் கல்வி நிறுவனங்களையும் உயர்கல்வி நிறுவனங்கள் தொடங்கியிருக்குது.

முந்தி எங்கட காலத்தில மேல படிக்கிறதெண்டால் கணிதம், விஞ்ஞானம், வணிகம் மற்றது கலைப்பிரிவு இப்பிடித்தான் பிரிவுகள் இருந்தன. இப்ப என்னடா என்டா நூற்றுக்கணக்கான பாடத் தெரிவுகள் இலங்கையிலையே அதிகரிச்சிருக்குது. புதுசா தொழில் துறையில ஆர்வம் காட்டுற பிள்ளைகள் தங்கட தெரிவுகளா புதுத்துறைகளை தெரிவு செய்து மற்றவனை குறை சொல்லிக் கொண்டு கிடைக்கிற வாய்ப்புகளை பயன்படுத்தறது இல்லை. இந்தப்பிள்ளைகளை நான் என்னென்டு சொல்லுறது? இனி வாற காலத்தில எண்டாலும் அரசாங்க உத்தியோகம், வெளிநாட்டு வேலை எண்டு போறது ஒரு பக்கம் இருக்க, உள்நாட்டில வேலை செய்யவும் தாங்கள் தாங்களா புதிசு புதிசா தொழில்துறைகளை உருவாக்கிறதுக்கும் இப்போதைய இளஞ்சந்ததியள் முன்வர வேணும். இப்பிடி ஒரு சமுதாயத்தை உருவாக்கி எங்களை ஒரு தகைமையுள்ள சமூகமா மாத்திறதுக்கும் விழிப்புணர்வு ஒண்டு கட்டாயம்தேவையா இருக்கு

வாழ்க்கைய வெகு சிறப்பாக்கியிருக்கினம். ஆனா நவீன உலக வளர்ச்சிய பார்த்து, உதாசீனம் செய்யினமோ? அறியாமையிலை இருக்கினமோ எண்டு தெரியேல்லை. இப்ப அந்த நாலு பாடத்தை மட்டும்தான் படிக்கோனும் எண்டு சொல்லுறவை தான் வட இலங்கையிலை அதிகமா இருக்கினம். பிள்ளைகள் படிச்சு அரசாங்க உத்தியோகம் தான் செய்ய வேணும் எண்டு பெற்றோர்கள் ஒற்றைக்காலிலை நிக்கினம். தனியார் துறையிலும் நிரந்தர நிறைய வேலை இருக்குது நிறைய சம்பளம் கிடைக்குது. தொழில்துறைலை எவ்வளவோ முன்னேற்றகரமான வேலைகளெல்லாம் செய்யலாம். ஆனா இதையெல்லாம் நம்பாத, இல்லாட்டி விரும்பாத சமுதாயம் தான் இப்ப எங்கட சமுதாயம். தனியார் துறைகளில வேலை செய்யிறதுக்கு நினைச்சாலும் அதில வேலை செய்யிறதுக்கும் ஏற்ற படிப்பு இல்லாமல் தான் எங்கட பிள்ளைகள் இருக்கினம்.



உண்மையா இதுக்கெல்லாம் வாத்திமார், கல்வி அதிகாரிகள், கல்வி சாராத அதிகாரிகள் மற்றது பெற்றோர்கள் இவையைத் தான் நாம் கேள்வி கேட்க வேணும். இப்ப யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில மட்டுமில்ல அதுக்கேத்த மாதிரி அரசாங்கத்தின்ர கல்வி நிறுவனங்கள் எத்தனையோ இருக்குது. அதுகளில சேந்து படிக்கிறதுக்கு இல்லாட்டி தொழில் பழகிறதுக்கு எங்கட பிள்ளைகள் தயாரில்லை. ஆனா பாருங்கோ இலங்கையில எந்தெந்த மூலையிலிருந்தெல்லாம் இஞ்சை வந்து பெடி, பெட்டையள் படிக்குதுகள், தொழில் பழகுதுகள் அதுகளை பாராட்ட வேணும். எங்கடையள் என்னென்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் பொழுது



வாமதேவன் தியாகேந்திரன்
தொழிலதிபர்

இம்மாதம் சிரித்திரன் தாங்கிவரும் பிரமுகர்களில் கொடை வள்ளல், தியாகி என்று அனைவரினாலும் போற்றப்படுகின்ற ஒருவர் பல்வேறு விதமான மக்களுக்கும் கோடிக்கணக்காக பணத்தினை வாரி வழங்குகின்ற வள்ளல் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.வாமதேவன் தியாகேந்திரன் அவர்களை தேன் பொழுது பக்கத்தினூடாக பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகின்றோம்.

**வணக்கம்! உங்களைப்பற்றி சிறிய அறிமுகம் தரமுடியுமா?**

யாழ்ப்பாணம் நல்லூர்தான் எனது பிறப்பிடம். எனது ஆரம்பக்கல்வியை யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பித்து பதினோராம் தரம் வரையும் அப்பாடசாலையிலே கற்றுவந்தேன். பின்னர் யாழ். மத்திய கல்லூரியில் உயர்தரம் படித்தேன். அதனைத் தொடர்ந்து வெளிநாடு சென்று ஐம்பது வருடங்களாக கம்பனி வைத்து வேலை செய்துவருகிறேன். தற்போதும் வெளிநாட்டிற்கு சென்று வருவேன். அவ்வளவுதான் என்னைப்பற்றியது.

**நீங்கள் தற்போது எப்படியான சேவைகளைச் செய்து கொண்டிருக்கின்றீர்கள்?**

யாழ்ப்பாணத்திலே தியாகி அறக்கொடை நிறுவனத்தை நடாத்திக் கொண்டிருக்கிறேன். சின்ன வயதிலிருந்தே மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்பது எனது விருப்பமாக இருந்தது. சிறுவயதிலே என்னிடம் காசு இல்லை என்றாலும் வேறு யாரிடமாவது காசு பெற்றாவது தண்ணீர்பந்தல் அமைத்து அன்னதானம் கொடுப்பேன். அன்றிலிருந்து தொடங்கியதுதான் இந்தச் சேவை.

**தியாகி அறக்கொடை என்ற பெயரில் பலருக்கு கோடிக் கணக்கான பெறுமதியான பணத்தை செலவளிக்கிறீர்கள் இதனை உருவாக்கும் போது நீங்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொண்டீர்கள்?**

நான் வெளிநாட்டிலே பல வருடங்கள் கம்பனிகளை வைத்து வேலை செய்துள்ளேன். அதன் மூலம் பணம் கிடைத்தது. நான் எம். ஜீ. ஆரை பின்பற்றி அவருடைய படத்தைப் பார்த்து அவரை போல் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைப்பதும் உண்டு. இன்றும் அதைச் செய்து வருகின்றேன். எனது பிள்ளைகள் வைத்திய துறையிலும், பொறியியல் துறையிலும் பணி புரிந்து வருகின்றார்கள். நான் மக்களுக்கு உதவி செய்யும் சேவையினை அவர்கள் தடுத்ததில்லை. என்னை இன்று வரையும் உற்சாகப்படுத்தி அனைவருக்கும் உதவுமாறு ஊக்கமளிக்கின்றார்கள். ஆகையால் நான் தொடர்ந்தும் தேவையான உதவிகளை தேவையானோருக்குச் செய்து வருகின்றேன்.

**நீங்கள் யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவன் என்பதுடன், கிரிக்கெட் வீரராகவும் இருந்துள்ளீர்கள் நீங்கள் விளையாட்டுத்துறையில் காட்டிய ஆர்வம் பற்றி.?**

நான் கிரிக்கெட்டின் தலைவராக இருந்திருக்கின்றேன். கால்பந்து விளையாட்டிலும் ஆர்வம் கொண்டிருந்தேன். கொழும்பில் நடைப்பெற்ற கால்பந்து விளையாட்டுக் களிலும் ஈடுபட்டுள்ளேன். மாகாண மட்டத்திலும் அனைத்து விளையாட்டுக்களிலும் விளையாடியுள்ளேன். நான் கற்ற பாடசாயாலையாழ். மத்திய கல்லூரிக்கு 60 இலட்சம் ரூபாயில் முன்வாயிலை கட்டிக்கொடுத்திருக்கின்றேன்.

**கொரோனா வைரஸ் காலத்திலே மக்கள் பல்வேறு இடர்களைச் சந்தித்திருந்தார்கள் அவ்வாறான சூழ்நிலையில் மக்கள் உங்களிடம் உதவி கேட்டார்களா?**

ஆம் கொரோனா நெருக்கடியான காலத்தில் பலருக்கு வேலை இல்லாமையால் அன்றாட வேலைக்குச் செல்லும் மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வேளைகளில் பலருக்கு எமது விற்பனை நிலையத் தினூடாகவும், வேறு வகையிலும் பல்வேறு வகையான உணவுப் பொருட்களை இலங்கை முழுவதிலுமுள்ள மக்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். இப்போதும் கொடுத்து வருகின்றோம்.

சிறுவயதிலே என்னிடம் காசு இல்லை என்றாலும் வேறு யாரிடமாவது காசு பெற்றாவது தண்ணீர் பந்தல் அமைத்து அன்னதானம் கொடுப்பேன். அன்றிலிருந்து தொடங்கியதுதான் இந்தச் சேவை.

**நீங்கள் எவ்வாறான உதவித்திட்டங்களை இதுவரையும் வழங்கியுள்ளீர்கள்? உங்களிடம் உதவி பெறுவர்கள் எவ்வாறானவர்கள்?**

எம்மிடம் உதவி பெறுபவர்கள் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்கள், நோயால் பாதிக்கப்பட்டு அதற்கான சிகிச்சைகளைப் பெறுவதற்கு வசதிகள் இல்லாதவர்கள், வீடின்றி வாழ்பவர்கள், தொழில் முயற்சி செய்பவர்கள், மாணவர்கள், மற்றும் அனர்த்தங்களின் போது பாதிக்கப்படும் மக்கள் என பலர் எம்மிடம் உதவி கேட்டு வருவார்கள். என்னால் இயன்ற உதவிகளை நான் வழங்குவேன்.



"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீர துடைத்து." என்ற குறளுக்கிணங்கிய உங்கள் சேவை தொடரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஆசிரியர் :–** உலகப்படத்திலை எங்கள் நாட்டைக் காட்டு பார்க்கலாம்?
**மாணவன்–** தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்காங்கள் சேர்.




**கற்காலமும் தற்காலமும்**



**ஒருவர்** – தம்பி என்ன செய்யிறீங்கள்?
**மற்றவர்** – அப்பாவுக்கு உதவியா இருக்கிறேன்.
**ஒருவர்** – அப்பா என்ன செய்கிறார்?
**மற்றவர்** – சும்மா இருக்கிறார்.



**ஒருவன்** – என்னப்பா நீ கொஞ்சம் கூட ஒரு கொள்கையில்லாதவனாய் இருக்கிறாயே! எல்லாக் கட்சிக் கூட்டத்திற்கும் போய் எல்லாக் கட்சிக்காரரையும் வால்பிடிக்கிறாயே!
**மற்றவர்** –கட்சிக் கொள்கையைக் கடைப்பிடிச்சா என்னால் வாழ முடியாது…! ஏனென்டா நான் ஒலி பெருக்கி வாடகைக்கு விடுபவன் ஐயா.



**ஒருவர்** – அண்ணாவின் பெயரென்ன?
**ஒருத்தி** – ஞாபகமில்லை மறந்து போச்சு
**ஒருவர்** – என்ன? பிதாவுக்கு சமமான அண்ணாவையா மறந்தாய்?
**ஒருத்தி** – அண்ணா பணக்காரனாக இருந்தால் தானே அவர் பெயர் ஞாபகமிருக்கும்!



**அம்மா இரத்ததானம் செய்யப் போகிறேன்.**

**கொழுப்புப்பிடிச்சதுகள் செய்யிற வேலை உனக்கேன் மோனை... அரைவாசியாப் போனாய்!... வா.. இரண்டு முட்டை குடி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயர் நயந்தவை



சிரித்திரன் வருகை எமக்கு பெரும் மகிழ்ச்சி தருகிறது. நான் சுந்தர் ஆசிரியரின் காலத்திலிருந்து வெளிவந்த ஒவ்வொரு இதழையும் தவறாது படித்துக் கொண்டிருக்கின்றேன். இவ்வாறு ஒரு காட்டூன் சஞ்சிகை எம்மண்ணிலே பல்நெடும் காலமாக வெளி வராமை கவலைக்குரிய விடயமே தொடர்ந்தும் உங்களது பணி சிறப்பாக நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**இ.மோகன சுந்தரம் , நெல்லியடி.**

அன்பு ஆசிரியரே உங்கள் பணி ஒரு வைத்தியரின் பணியாகும் சிரித்திரன் என்பதை நான் எப்பொழுதும் சிரித்துக்கொண்டிரு என்ற பொருளைத் தருவதாகவே பார்க்கிறேன். வாழ்த்துக்கள்

**க.மைதிலி . பன்னாலை**

சிரித்திரனின் மீள்வருகை கண்டு நான் பெரும் மகிழ்ச்சியடைந்தேன். மீள் வருகை நிகழ்வு யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் இடம்பெற்ற போது என்னையும் அதற்கு அழைத்திருந்தமைக்கு மிக்க நன்றிகள். இவ்வாறு பத்திரிகைத் துறையிலே காட்டூன் ஓவியங்களை வரைந்து அதன் மூலம் அனைத்து விதமான விடயங்களையும் கொண்டு வருவதை நான் மிகவும் பாராட்டுகின்றேன். நன்றி

**தி.வைத்திலிங்கம், பேசாலை**

வாழும் நாட்கள் சில காலம் என்றாலும் அதில் எவ்வளவு நாட்கள் மகிழ்ச்சியுடன் கழிக்கின் றோம் என்பது எமது வாழ்வில் சிரிக்கும் தருணங் கள் தான் முடிவு செய்யும். அந்த வகையில் சிரித்திரன் என்பது கையில் கிடைத்தால் அந்த நாள் முழுவதும் சிரிப்பிற்குரியதாகும். அதுவே சிரித்திரனின் தனித்துவம்.

**சு.சுதர்மன், யாழ்ப்பாணம்**

வையகம் வாழும் வரை வர வேண்டும் சிரித்திரன். வாழ்வின் தொல்லைகள் நீங்க மகிழ் விப்பாய் எமை எல்லைகள் இன்றிய உன் பணி தொடர வல்லமை தருவாள் சரஸ்வதி தாயே

**க.மாதவி, மட்டுவில், வடக்கு சரசாலை**

சிரிப்புடன் மிளிர்ந்து நம் சிந்தைக்குள் நுழைந்து நம்மை சிரிக்கவும் வைத்து சிந்திக்கவும் வைத்த சிரித்திரனே வாழ்க வளர்க உன் புகழ் ஓங்குக இப்பூமிதனில்

**அ.லேனா, யாழ்ப்பாணம்**

வாழ்க்கையில் துன்பங்கள் வழமையாகிப் போக இரசனைப்பகுதிகள் அரிதாகிய வாழ்க்கையில் சிரித்திரனின் இரசனைப்பகுதிகளை உருவாக்கியதற்கு நன்றிகளும் உமது பணிகள் தொடர வாழ்த்துக்களும்.

**செ.விநோதன், கொழும்பு**




கேலிச்சித்திரத்தின் மூலம் ஆழ்ந்தகருத்துக்களையும் வாழ்வின் அர்த்தத்தையும் உணரக் கூடிய சிறுகதைகளையும் வாழ்க்கையின் சிந்தனை யைத் தூண்டி நிற்கின்ற பல ஆக்கங்களையும் சிரித்திரனில் மிளிரச் செய்து நம் கண்முன்னே கொண்டு வந்த சிரித்திரன் சுந்தர் ஐயாவுக்கு நன்றிகள். நீங்கள் மறைந்தாலும் உங்கள் கனவுகள் அழியவில்லை. இன்றும் அதே பொலிவுடன் நம் கையில் சிரித்திரன் சிரிக்கின்றது.

**அ.கலா, மட்டக்களப்பு**

நமது அபிமான சிரித்திரன் இதழ் அதிவேக தபால் சேவையில் நேற்று அடியேன் கரம் கிட்டியது. நன்றியுடன் பழைய நினைவுகளை மீட்டிப் பார்க்கிறேன். சிறுவயதிலிருந்தே சிரித்திரனின் வாசகனாக இருந்திருக் கின்றேன். இன்று மீண்டெழுந்து அகம் தேடி வந்த அருமை சிரித்திரன் இதழை கையில் வைத்துக் கொண்டு பழைமை யைத் தேடுகிறேன். அகமகிழ்வுடன் எனக்குள் ஒரு புது உற்சாகம் பிறந்தது. சிரித்திரனின் சுவையைக் கூட்டி மெருகேற்றிப் பார்க்க ஆசை. இது முடிந்து விடும் ஆசை அல்லாமல் முத்து முத்து ஆசையாகத் திகழ வேண்டும் என்ற அவாவுடன் எனது நன்றிக்கடனாக எனது பங் களிப்பை சிரித்திரன் இதழுக்கு வழங்க முன் வந்துள்ளேன்.

**எஸ் எம் எஸ்.ஹமீட், புத்தளம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிப்பு

விசர் ஆஸ்பத்திரியிலேயே வழக்கம் போல் வார்ட்டைச் சுற்றி நோயாளிகளை பார்வையிட்டுக் கொண்டு வந்தார் டொக்டர்.

டொக்டரைக் கண்ட ஓர் விசரன். கட்டிலை விட்டு அவுக் கென்று எழுந்து நின்று முழிசினான்.

அதைக் கவனித்த டொக்டர். இந்த விசரன் ஏதும் கேடு செய்து விடுவானோ? என்று தனக்குள் அஞ்சி. சற்று நழுவிக் கொண்டிருக்க. விசரன் ஐயா என்று அவரையே அழைத்தான். அவர் கட்டிலுக் கப்பால் சென்று எட்ட நின்று. அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

அவனோ அழுகின்ற பாவனையில். "ஐயா. நான் இந்தக் கோலத்தில் நின்று எதைச் சொன்னாலும் என்னை விசரன் என்று நினைத்து என் பேச்சைக் கேட்க மாட்டீர்கள். உண்மையாக எனக்கு விசரே இல்லை. என் கதையை கேட்டு விட்டு அப்பால் அந்த முடிவிற்கு வாருங்கள்" என்று இரந்து வேண்டினான்.

விசர் ஆஸ்பத்திரியில் இருக்கிற விசர்கள். எங்களுக்கு விசர் இல்லை என்று. தங்கள் விசர் தனத்தில் பேசுகிற விருத்தங்களில் இதுவும் ஓர் விசர் பேச்சு என்று டொக்ரர் விசர் போக்கை தனக்குள் நினைத்துக் கொண்டே. "சரி. உன் கதையைக் கூறு. கேட்போம்" என்று ஓர் விசரன் போல் உற்றுக் கேட்டார்.

அப்போது அவர் முகத்தில் பரிகாசம் தெரிந்தது... அவன் முகத்திலோ பரிதாபம்



எஸ்.அகஸ்தியர்

சொரிந்தது. உடனே அவன் கைகளைக் கட்டிய வண்ணம் மரியாதையாக எழுந்து நின்று. "எனக்கு நீங்கள் ஓர் உதவி செய்வதாக முதலில் வாக்குத் தர வேண்டும்?" என்று நயந்து கேட்டான்.

இவன் விசரன் தானே என்ற நினைப்பில். அவர். சும்மா ஓம் என்று ஒப்புக்கொண்டார். எனவே தன் கதையைக் கூறினான். "ஐயா இதுவே உண்மை. நான் ஒரு இலட்சாதிபதி உறவினர் என்னை வஞ்சித்து அதை அபகரித்து விட்டார்கள். என் வசம் இருந்த காணி பூமிகளையும் கபடமாகப் பறித்து விட்டார்கள். என் மனைவி பிள்ளைகள் இருக்க நிலமோ. வசிக்க வீடோ புசிக்க உணவோ இன்றி தவிக்கிறார்கள். இந்த ஏக்கத்தால் நான் சிக்குண்டு சித்தங்கலங்கியிருக்க. பித்தன் என்று சொல்லிச் சில எத்தர்கள் என்னை இங்கு கொண்டு வந்து அர்த்தமில்லாமல் சேர்த்துவிட்டார்கள்..."

இந்தக் கதையைக் கேட்ட டொக்டரின் மனசு உண்மையில் உருகிக் கசிந்து விட்டது. அவன் மீது உடனே கருணை கூர்ந்து. "இதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாய்?" என்று ஓர் குழந்தை போல குழைந்து கேட்டார் டொக்டர்.

மனிதன் உருவாக்குவதைப் பார்க்கிலும் அழிப்பதில்தான் ஆர்வம் காட்டுகின்றான்.

ஏன் அப்படிச் சொல்கிறாய்? நாம் போட்ட கோலங்களை அழித்துக்கொண்டிருக்கி-ன்றான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானும் எனது மனைவி குழந்தைகளும் இருந்து ஜீவிக்க. அபகரித்தவற்றிலே ஒரு நிலத் துண்டாவது பெற்றுத்தர வழி செய்ய வேண்டும். உங்களை மன்றாட்டமாக நான் கேட்பது இது ஒன்று தான்" என்று இரந்தான் அவன்.

டொக்டருக்கு மெய்யாகவே கண் கலங்கிற்று இவன் உண்மையில் விசரன் இல்லை. இவனுக்கு விசர் என்று சொன்னவர்கள் தான் முழுவிசரர்கள் என்று தனக்குள் கணித்து உறுதிப் படுத்திய போது. தனது திறமையில் சந்தேகமும் வெட்கமும் அவருக்கே தோன்றின.

உடனே அவன் அருகில் அவர் சென்று. அவன் முதுகில் தட்டிக்கொடுத்து "இனி நீ கலங்காதே ஆக வேண்டிய உதவியை நான் கட்டாயம்செய்துதருவேன்." என்றுவாக்குக்கொடுத்து விட்டு அடுத்த வார்டுக்கு நடந்து கொண்டிருந்தார்.

அப்போது இடியேறு விழுந்த மாதிரி அவர் பிடரியில் மருந்துப்பெட்டி தடங்கென்று அடியுண்டு விழுந்தது.

"சுறீர்" என்று இரத்தம் பீற டொக்டர் மயக்கம் போட்டு நிலத்தில் "தொப்" பென்று விழுந்தார். எல்லோரும் விழுந்து கட்டி ஓடினார்கள்.

அந்த வேளை... தூக்கி எறிந்த மருந்துப்பெட்டி டொக்டரின் மண்டையில் நல்ல இலக்காகப்பட்டதை. மிகப் பெருமிதக் களிப்போடு பார்த்த வண்ணம். தனது பெட்டின் மீது ஏறி இருந்து வலு குஷாலாகச் சிரித்துக் கொண்டிருந்தான். அந்த விசரன்.

வார்ட் அதிர அங்கே ஒரு நேஸ் கத்தினாள் "விசரர்களை" விசரர்கள் என்று சரியாக கணிக்கத் தவறுவதே பெரும் விசர்த்தனம். இதனால் தான் உலகத்தில் பல வகையான விசர்த்தனங்கள் வலு புத்திசாலித்தனம் போல. அசல் விசர் வேலைகளாய் நிகழ்கின்றன."

அப்பவும் விசரன் சிரித்துக் கொண்டே இருந்தான்.

(யாவும் கற்பனை)



**ஒருவர் :** கஞ்சாப் பயிரை மருந்துப் பொருளாக பிரகடனம் செய்து அதைப் பயிரிட அனுமதிக்க வேண்டும் என்று பிக்கு ஒருவர் கோரிக்கை விடுத்திருக்கிறாரே..!

**மற்றவர் :** அப்படியென்றால் கசிப்பை குடிநீராகப் பிரகடனம் செய்து அதன் உற்பத்திக்கு அனுமதி கேட்டுக்கூட யாரும் போகக் கூடும்.



பாடுபட்டு. சண்ட போட்டு.
ஸ்ட்ரைக் அடிச்சி
ஆயிரம் ரூபா கெடைச்சதுங்க.
சந்தோசங்க.
தலைவர் ஐயா மாரு
கைகாட்டி சிரிச்சி சொன்னாங்க.
இந்த மாசம்
இருபத்தி ஐயாயிரத்துக்கு மேல வருங்க.
ஆனா வேலைக்கு போனா
பதினாலு நாளு தான் வேலைங்களாம் - சாமி
கூட்டி கழிச்சி பார்த்தா
பதிமூனே தாண்டாது போல.
பொறிமாதோண்டி
சட்டிய ஒடைச்ச கதய்யா இருக்குங்க
நம்ம வாழ்க்கை

**திலக்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடி பதில்கள்



**பெண்கள் மட்டும் திருமணத்திற்கு முன், பின் என தமது பெயரில் உடைமை மாற்றம் செய்கிறார்களே, அது சரியானதா?**




அப்படி உடைமை மாற்றம் செய்தால் தானே தந்தையினுடையதும், கணவனுடையதுமான உடைமைகளுக்கு உரித்தாகலாம்.

லாவண்யா, நெல்லியடி



**சிரித்திரன் மீள்வருகை பற்றி உமது கருத்து?**

காலத்தேவை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. சிந்தனையையும் சிரிப்பையும் மறந்து போய்க் கொண்டிருக்கும் ஓர் இனத்திற்கு சிரித்திரனால் புனர்வாழ்வளிக்க முடியும்.

இ. கமல், பருத்தித்துறை



**அன்புதான் ஜெயிக்கும் என்று சொல்கிறார்களே, சொந்த அனுபவத்தில் அன்பு மட்டும் கொண்டு ஜெயிக்கலாமா?**

ஆத்மார்த்த அன்புக்கு பின்னடைவுகள் இருந்தாலேன்றி தோல்வி என்பதே கிடையாது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர்சியான போராட்டம் சொல்லி நிற்கும் செய்தியும் இதுதான்.

நிரோஜா, செங்கலடி



**கொரோணா காலத்தில் ஒன்லைன் வகுப்புகளுக்கு வசதி இல்லாத மாணவர்கள் என்ன செய்திருப்பார்கள்?**

எங்கள் நாட்டில் இலவசக்கல்வி வசதியைக் கூட தொழிட்நுட்ப ரீதியில் பெற்றுக் கொள்ள வசதியுள்ளவர்களுக்கே வாய்ப்புகள் அதிகம்.

ம.யோகன், அச்சுவேலி

**எது தேவை? நல்ல சட்டங்களா? நல்ல ஆட்சியாளர்களா?**

நல்ல ஆட்சியாளர்கள் இருந்தால் மட்டுமே நல்ல சட்டங்கள் உருவாகும்.

குமார், கரவெட்டி



**காதலர் தின பரிசாக பழைய சிரித்திரன் புத்தகங்களை வாங்கி அன்பளிப்பு கொடுத்திருக்கிறேன். நான் செய்தது சரியா?**

உங்கள் காதலியை வெறுமனே சிரிக்க வைக்க முயலாமல் சிந்திக்க வைக்க நீர் எடுத்த முயற்சி மிகச் சரியானதே.

ம. தேனமுதன், முல்லைத்தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தனியார் நிறுவனங்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் என்ன ஒற்றுமை?**

தனியார் நிறுவனங்களில் நிர்வாகக் கட்டுக் கோப்பு சிறப்பாக இருக்கும் ஊழல் உள்நுழைய அஞ்சும். அரச நிறுவனங்கள் நிர்வாகக் கட்ட மைப்பு இருந்தாலும் ஊழலே ஆட்சி புரியும்.

**கவிதா, கரவெட்டி**

**தனியார் பல்கலைக்கழகங்கள் அதிகமாக உருவாகுவ-தால் கல்வித்தரம் பாதிக்காதா?**

தனியார் பல்கலைக்கழகம் என்பது கல்வியை வியாபாரமாக்கும் உள் நோக்கத்தை இலட்சியமாகக் கொண்டது. அரச பல்கலைக்கழகங்கள் தங்கள் இன, மத , மொழி ரீதியில் பேதப்படுத்தி பார்க்கும் பேரின வாதப் போக்கை அடிப்படையாகக் கொண்டது.

**வை. மாதவி, பொன்னாலை**

**கிரகங்கள் மனித வாழ்க்கையைத் தீர்மானிக்குமா?**

பரிகாரங்கள், பூஜை புனஸ்காரங்களின் மூலம் கிரகங்களின் செயற்பாடுகளை நிர்ணயிக்க அல்ல மாற்றும் இயல்பும் கொண்டவன் மனிதன்.

**எ. திவாகரன், கிளிநொச்சி**

**போராட்டங்கள் வலுக்கிறதே ஏதும் தீர்வு கிட்டுமா?**

ஒரு இனத்தை தீர்த்துக் கட்ட நினைப்பவர்கள் தீர்வைத் தருவார்கள் என நினைப்பது முட்டாள்தனம். வலுக்கும் போராட்டங்கள் தீர்வை வென்றெடுப்பதற்கான நெஞ்சுறுதியை தக்கவைக்கும் அவ்வளவுதான். நீதிக்கானதும் நீதியானதுமான போராட்டங்கள் தோற்றதாக வரலாறு கிடையாது.

**கா. தனபாலன், புத்தளம்**

**மாகாணசபைகளால் தமிழருக்கு பயனுண்டா?**

தமிழ் அரசியல்வாதிகளுக்கு லாபகரமான பலனுண்டு.

**பா. வைஸ்ணவி, புத்தளம்**

**இலங்கை அரசியலில், இப்போது உள்ள அரசியலுக்கும் அந்தக் கால அரசியலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

அந்தக் கால அரசியல் பேரினவாத ஜனநாயக அரசியல் இப்போது பேரினவாத சர்வதிகார அரசியல். அவ்வளவுதான்.

**அ. சாலினி, பூந்தோட்டம்**

**இப்பொழுதெல்லாம் மாணவர்களின் பொது அறிவு குறைவாக உள்ளதே காரணம் என்ன?**

கல்வியறிவு கற்றுப் பெறுவது, பொதுஅறிவு என்பது தேடிப் பெறுவது .தேடல் குறைந்தால் பொது அறிவு வளராது.

**சி.மயூரன், வெள்ளவத்தை**

**ஐ. நா சபையில் இலங்கை உரிமை மீறல் தொடர்பில் என்றைக்காவது தீர்வு கிட்டுமா?**

ஐ.நாவும் ஒரு வகையான சர்வதேச அரசியல் விவாத அரங்கே சர்வதேச குற்றவியல் நீதி மன்றமல்ல தீர்ப்பளிப்பதற்கு.

**தி.இராஜரத்தினம், முருங்கன்**



**மகுடியார் மனைவிக்கு பயப்படுவதுண்டா?**

கேள்விகள் கேக்கும் மனைவியை மகுடியார் சமாளித்து விடுவார். அதிகாரம் செய்யும் மனைவியை எதிர்ப்பது ஆபத்தல்லவா!?

**கி. கமலக்கண்ணன், பாசிக்குடா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தற்காலத்தில் முதலாளியா அல்லது தொழிலாளியா மோசமானவர்கள்?**

தொழிலாளியை மதிக்காத முதலாளியும் தொழிலில் நேர்மை இல்லாத தொழிலாளியும் மோசமானவர்களே.

**க. தனுஷன், இத்தாவில்**

**மனிதம் எப்போது செயலற்றுப் போகிறது?**

மதம் மனிதனை மதவாதி ஆக்கும் போது

**கே. சற்குணராஜா, கண்டாவளை**

**சமகால தமிழ் மக்களின் வாழ்க்கை நிலைமை எப்படியிருக்கிறது?**

சமர்கால வாழ்க்கையில் போதிந்த அச்சமற்ற வாழ்க்கை இப்போதில்லை.

செ. கணபதி, அரியாலை

**அரசியலில் நடுநிலை வகிப்பதாக கூறுபவன் எப்படிப்பட்டவனாக இருப்பான்?**

அவன் மதில் மேல் பூனை போன்றவன். சந்தர்ப்பவாதியாக இருப்பான்.

**தி. சாருஜன், பூநகரி**

**கடன் வாங்கி கல்யாணத்தை நடாத்தும் வீடு உருப்படுமா?**

கடன் வாங்கி தேர்தல்களை நடத்தும் நாட்டில் வேறு எப்படித்தான் திருமணத்தை நடத்த முடியும்.

**ச. சஜிபன், வவுனியா**

**மருத்துவம் வியாபாரமாகி வருகிறதே?**

ஆமாம் மருத்துவர்களும் தொழிலதிபர்களாகி வருகிறார்கள்.

**தெ. சுதன், திருமுறுகண்டி**

**மகுடியாரே நீங்கள் அரசியல்வாதியானால்?**

ஏனைய அரசியல்வாதிகள் என்னை தொலைத்து விடுவார்கள். அல்லது அரசியலுக்குள் நான் தொலைந்து போவேன்.

**ந. அருள்நேசன், வல்வெட்டித்துறை**

**யாழ்ப்பாணத்தில் புதிய கட்சிகளினதும் அமைப்பு களினதும் உருவாக்கம் அதிகமாகிவிட்டதே?**

ஒற்றுமைக்கு தயாரில்லாத ஒருமித்த சிந்தனை இல்லாத மக்களிடையே வேற்றுமையை வளர்த்த அரசியலே அநுகூலம் பெறும் காலமல்லவா!

**ம. கோகிலா, இயற்றாலை**

**நாட்டில் பொருளாதார வளர்ச்சி எப்படியிருக் கிறது?**

அந்நியக் கடன்களும், விலைவாசியும் உயர்ந்து கொண்டு போகிறது. வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி காணும் போது பொருளாதாரம் எப்படி வளர்ச்சி காணும்.

**க.கோமகன், தர்மபுரம்**

**எமது நாட்டில் பணவீக்கம் அதிகரிக்கிறதே குறைக்க ஏதும் வழியுண்டா?**

தலைவீக்கம் உள்ள தலைவர்கள் இருக்கும் வரை பணவீக்கம் நாட்டில் குறையப் போவது இல்லை.

**நி. பாலசுந்தரம், புன்னைநீராவி**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைர மோதிரம் தந்த வாழ்க்கைத் தத்துவம்

முன்னொரு காலத்தில் வாழ்ந்த அரசன் ஒருவன் தனது மந்திரிகளை அழைத்து நான் பெறுமதி மிக்க ஒரு மோதிரத்தை உருவாக்க விரும்புகின்றேன். அதற்காக உலகிலே விலை உயர்ந்த இரத்தினக்கல்லை வாங்கியுள்ளேன் என்றான்.

நான் உருவாக்கும் அந்த மோதிரத்தில் ஒரு செய்தியை மறைத்து வைக்க வேண்டும். அந்தச் செய்தி எனக்கோ ஆட்சி புரிவோருக்கோ அவசர கால ஆபத்துக்களில் உதவ வேண்டும். என்றும் அந்தச் செய்தி இரத்தினக்கல்லின் கீழ் மறைத்து வைக்கக் கூடியதாக சிறியதாக இருக்கவேண்டும். என்றும் அரசன் கூறினான்.



இதைக் கேட்டுக்கொண்டிருந்த அறிவாளிகள் அனைவரும் பந்திகளாக, பக்கம் பக்கமாக எழுதக்கூடியவர்களொழிய. சிறிய வசனங்கள் மூன்று, நாலு சொற்களில் எழுதத் தெரியாதவர்களாக இருந்தனர். அரச சபையில் இருந்த அறிவாளிகள் அனைவரும் முயன்றும் அவர்களால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

அரசன் தாய் தந்தை இன்றி சிறு வயதிலிருந்தே வயதான வேலைக்காரன் ஒருவனாலேயே வளர்க்கப்பட்டான், ஆகையால் தனது வளர்ப்புத் தந்தையாகிய வேலைக்காரன் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தான். இதனால் அவரிடமும் தான் உருவாக்கப்போகும் பெறுமதி மிக்க மோதிரத்தினுள் வைப்பதற்கு செய்தியினைத் தருமாறு கேட்டிருந்தான்.

வயதாகிய அரசனின் வளர்ப்புத் தந்தை கூறினான் "நான் ஒரு புலமை பெற்ற அறிவாளி யல்ல. ஆனால் எனக்கு ஒரு செய்தி தெரியும்" உனது தந்தை ஆட்சி புரிந்த காலத்தில் ஒரு மகான் இந்த அரச மாளிகையில் சில காலம் தங்கிச் சென்றார். அக்காலத்தில் அந்த மகான் என்னிடம் ஒரு பெறுமதி மிக்க செய்தியைச் சொல்லிச் சென்றார். அந்தச் செய்தியை இப்போது நான் உனக்குத் தருகிறேன். எனக்கூறி ஒரு தாளில் அந்த செய்தியை எழுதி அரசனிடம் கொடுத்தார்.

"இதை வாசிக்கக்கூடாது" என்றும் கூறினார். இதை நீ உனது மோதிரத்துக்குள் ஒளித்துவை எப்போதாவது உயிரை இழக்கப் போகும் ஆபத்தான தருணம் வரும் போது மட்டும் திறந்து பார் அது உனக்கு உதவும் என்றார். அரசனும் அவ்வாறே செய்தான்.

சிறிது காலத்தின்பின் அரச இராச்சியத்தின் மேல் எதிரிகள் படையெடுத்தனர். அரசன் போரில் தோல்வியடைந்து நாட்டை விட்டு தப்பியோடிக்கொண்டிருந்தான் எதிரிப்படைகளோ அவனை தொடர்ந்து துரத்திக் கொண்டிருந்தன. படையணியோ பரிவாரங்களோ இன்றி அரசன் தனியாக ஓடிக்கொண்டிருந்தான். எதிரே செங்குத்தான பாறை, திரும்புவதற்கு வழியில்லை. அரசன் தனது விரலிலிருந்த இரத்தினக்கல் மோதிரத்தை நினைத்தான். திறந்து அதிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளை எடுத்து அதில் எழுதியிருந்த செய்தியை வாசித்தான்.

"இதுவும் கடந்து போகட்டும்" என்றிருந்தது.

அந்தச் செய்தியை வாசித்ததும் அவனுக்குள் அமைதியை உணர்ந்தான். அதிஸ்டவசமாக அவனின் எதிரிகள் பாறைகளுக்குள் மறைந்து விட்டனர். அவர்களுடைய குதிரைகளின் காலடிச் சத்தங்களும் கேட்கவில்லை. அரசன் தனது வளர்ப்புத் தந்தையை நன்றியுடன் நினைத்தான். அந்தச் சொற்கள் நம்ப முடியாதவையாக இருந்தன. அரசன் வாசித்த பின் அந்தச்செய்தியை மோதிரத்தின் கீழ் வைத்தான்.

அரசன் தனது படையணியை மீண்டும் சேர்த்தான். மீண்டும் இராச்சியத்தை கைப்பற்றுவதற்கான அந்த நாள் வந்தது. போரில் அவன் வெற்றியடைந்தான். அந்த நாளை எல்லோரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடினர். அரசனுக்கு மாபெரும் வரவேற்பும், விருந்துமளிக்கப்பட்டது.

அப்போது அரசனுக்கு பக்கத்தில் நின்ற அவனது வளர்ப்புத் தந்தை கூறினார். இந்த இனிமையான தருணத்திலும் அந்த செய்தியை ஒரு முறை பார் என்று அதற்கு அரசன் "நான் இப்பொழுது வெற்றியடைந்துள்ளேன். மக்களும் அதனைக் கொண்டாடுகிறார்கள். ஆகையால் எனக்கு இப்போது அந்த செய்தி தேவைப்படாது என்றான். அதற்கு வளர்ப்புத் தந்தை அந்தச்செய்தி மகிழ்ச்சியான நேரத்திலும் கூட தேவைப்படும் என்றான். அரசன் உடனே அந்தச் செய்தியை மீண்டும் திறந்து வாசித்தான்.

" இதுவும் கடந்து போகட்டும்." என்றிருந்தது.

அரசன் மீண்டும் அதே மன அமைதியை உணர்ந்தான். அவன் வெற்றியைக் கொண்டாடினான் ஆனால் அவனது பெருமையும், அகங்காரமும் மறைந்து போனது. அந்தச் செய்தியை அரசன் நன்றாகப் புரிந்து கொண்டான். அவனுக்குள் ஒரு அறிவொளி பிறந்தது.

அப்போது அரசனின் வளர்ப்புத் தந்தை கூறினார். வாழ்வில் எவையும் நிரந்தரமல்ல வெற்றியும் தோல்வியும் இன்பமும் துன்பமும் அவ்வாறானவை தான் அவை என்றும் எமக்கு நிலையான சொந்தமாகாது என்றார்.

அரசன் மோதிரத்தின் செய்தியையும் தனது வளர்ப்புத் தந்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். நிரந்தரமற்றது தான் வாழ்க்கையில் நிரந்தரமானது.

ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு மொழி பெயர்க்கப்பட்டது.

## கல்(வி) அறிவு

அவன் குருடன் பிச்சையெடுத்த ஜீவனம்
வீதியோரத்து வாழ்க்கை அவன் முன்னிருக்கும்
தகரக்குவளையில் சில்லறைகள் வீழும்.
சில்லறைப்புத்தி கொண்ட சிலர் கற்களையும்
போடுவார். ஒரு நாள் கேட்டேன் 'உனக்கு
கற்களைப் பிச்சையாகப் போடுபவர்களே நீ ஏன்
திட்டுவதில்லை' அவன் சொன்னான்.

"நான் இவர்களுக்காக இரக்கப்படுகின்றேன். எனக்கு பார்வை மட்டும் தான் இல்லை. அவர்களுக்கு பார்வை இருந்தும் இதற்குள் போடவேண்டியது பணமா... கல்லா என்று யோசித்துப் பார்க்கும் அறிவு மல்லவா இல்லாமல் போய்விட்டது.



Mr. டாமோதிரன் - என்ன டார்லிங் இப்ப எதுக்கெடுத்தாலும் ஒரே புறட்டஸ்சா இருக்கு?
Mrs. டாமோதிரன் - யேஸ்... நானும் நேற்று சாப்பிட்ட கடையிலையும் அது தான்.
Mr. டாமோதிரன் - றைஸ் எண்டாலும் ஒரளவு சாப்பிடலாம். புறட்டஸ்சை சாப்பிடுறது வெறி காட் டார்லிங்.

Mr. டாமோதிரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச்சிமிழ்

**"இன் தமிழ் இனிமை தேடி"**

மொழியின் சிறப்பிற்கும் நிலைத்த மேன்மைக் கும் என்றும் துணை நிற்பன அம் மொழியில் காலவரம்பெல்களைத் தாண்டி நின்று அழ கொளிர இனிமை கொட்டும் இலக்கியப்படைப் புக்களே.

அன்று தொட்டு இன்றுவரை குறைவு படாமல் பெருமையுடன் ஒளிர்ந்தபடியிருக்கும் கம்பனின் தமிழ் இனிமையை இலக்கியச் சிமிழ் பகுதியில் நினைவில் மீட்டு அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வது மகிழ்வு தரும் என்ற நம்பிக் கையோடு "இன் தமிழ் இனிமை தேடி" என்றும் இப்பகுதியினை அன்புடன் படையல் செய் கின்றோம்.

தகாத இச்சையாம் பிறன் மனை விழைத லென்னும் நஞ்சு பரவியதால் நெஞ்சின் நீதி கள் அவிந்து போக தனது பாவ சிந்தனை தந்த பரிசாய் இராமபிரானுடன் யுத்த களத்தில் மோதி எண்ணரும் அம்புகளால் மேனி முற்றும் துளை யுற்று உதிரத்தில் உயிர் கரைய வீழ்ந்து கிடக் கிறான் இராவணன்.

சேதியறிந்து துடித்துப் பதைத்தவளாக யுத்த களத்துக்கு ஓடிவருகின்றாள் இராவணனின் மனைவி மண்டோதரி. தன் கணவனின் நிலையைக் கண்ணுறுகின்றாள் நிகழ்ந்தவை அனைத்தை யுமறிந்தவளான அவள்,

**" வெள்ளெருக்கஞ் சடைமுடியான்**
**வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்**
**எள்ளிருக்க இடமின்றி**
**உயிர் இருக்கும் இடம் நாடி இழைத்த வாறோ**
**கள்ளிருக்கும் மலர்க் கூந்தல்**
**சானகியை மனச்சிறையில் கரந்த காதல்**
**உள்ளிருக்கும் எனக் கருதி**
**உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி "**

என்று கேட்டுக் கதறுவதாகக் கம்பன் அந்தக் காட்சியைக் கவிதையாக்கித் தருகிறான். வெள்ளெருக்கம் பூக்களாலான மாலையை அணிபவனாகிய சிவனுக்குரிய மகாமேரு மலை யைத் தனது தோள்களினாற் பெயர்த்தெடுத்த இராவணனின் மேனியில் எள்ளுப் போடுமள விற்குக் கூட இடமில்லாத வகையில் இராவணனின் உயிர் எங்கேயிருக்கிறது என்று அம்புகளால் தேடிப்பார்க்கிறான் இராமன்.

தேன் சிந்தும் மலர் மாலையனிந்த சீதா தேவியின் மீது இராவணன் கொண்ட தகாத காதல் உள்ளேயிருக்கிறதா? என்று தேடிப் பார்ப்பது போல இராமனின் அம்புகள் தைத்தனவோ!

என அமைகிறது கம்பனின் தமிழ்க் கவிதை. இலக்கியங்களுக்கு மெருகு சேர்ப்பது அவற்றில் காணப்படும் நயக்கத்தகுந்த பகுதிகள் தான் இராமாயனத்தில் படித்து அனுபவித்து நயந்து கூறத்தக்க எத்தனையோ இடங்களுண்டு அவற்றினுள்ளே காணப்படக்கூடிய ஒரு வகை மாதிரியே மேற்தரப்பட்ட பகுதி.

இன்னும் தேடுவோம்
கண்டடைவோம்
பகிர்ந்து மகிழ்வோம்.



**நல்லை மன்றாடி மைந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தாவுடன் சிரியுங்கள்...



செய்தி :- அவசியமற்றவர்கள்
வைத்தியசாலை
வருவதை தவிர்க்கவும்



ஒருவர் :- இண்டைக்கு பட்டினி கிடந்து அலுவலகத்தில் வேலை செய்தன்

மற்றவர்:- ஏன் அந்தளவு கடுமையான வேலையா?

ஒருவர் :- இல்லை. மத்தியானச் சாப்பாட்டுக்கு என்னை யாரும் எழுப்பிவிடவில்லை.





ஒருவர் :- அந்த பிரதேச சபை உறுப்பினரை கைது செய்து விட்டார்களே? ஏன்

மற்றவர் :- பிரதேசசபை உறுப்பினர்கள் பொருட்களை வீட்டிற்கே கொண்டு சென்று கொடுக்கவேண்டும் என்பதை தவறாக புரிந்து கொண்டு அவர் தனது வீட்டிற்கே பொருட்களைக் கொண்டு சென்று குடுத்து விட்டாராம்.



ஒருவர் :- உன்னோடு அதிகம் சண்டைபோடும் பொண்டாட்டி இப்போது குனிந்த தலை நிமிராமல் இருக்கிறாளே எப்படி?

மற்றவர்:- அது ஒன்றுமில்லைப்பா 15 பவுன்ல சங்கிலி ஒன்று வாங்கி கழுத்தில் போட்டு விட்டேன்.



நீதிபதி :- அவனோட பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?
திருடன் :- என்கிட்ட அதோட சாவி இல்லையே ஐயா.



மலர்:- உங்கட நாயை சத்தம் போடம வைச்சிருங்கோ, என்னோட மகள் பாட ஆரம்பிச்சதும் அது குரைக்க ஆரம்பிக்கிது.
புஸ்பம்:- நான் என்ன சொல்ல? உங்க மகள் தானே ஆரம்பிக்கிறா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் மனிதர்கள்

**பொறையுடமை - அதிகாரம் 16**
**"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல**
**தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை"** திருக்குறளை மையப்படுத்திய ஒரு குட்டிக் கதை இப்படியும் மனிதர்கள் எனும் தலைப்பில்...

மாலை 5 மணி இருக்கும் வெளியே மழை தூறிக்கொண்டிருந்தது பஷ்மினி தன்னுடைய வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்காக பேரூந்தில் ஏறி அமர்ந்து கொண்டாள். பேரூந்தின் உள்ளே ஒரே சலசலப்பு. என்னமோ எதோ என்று எண்ணியபடி ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டாள். பேரூந்தினுள் 50 வயது மதிக்கத்தக்க ஒருவர் குடிபோதையில் தள்ளாடிக்கொண்டு இருந்தார். நாகரீகமற்ற வார்த்தைகளால் ஓட்டுனரையும் நடத்துனரையும் திட்டியபடி இருந்தார்.

ஏய்!... என்னய்யா...

நிறுத்தய்யா வண்டிய... நிறுத்தய்யா... உரத்த குரலில் அவர் வார்த்தைகள் வெளிவர பேரூந்தினுள் இருந்தோர் சங்கடத்துடனே பயணித்தனர்.



அந்த மாமனிதரின் இடுப்பில் கட்டிய துணியின் ஒரு பகுதி மட்டுமே இடுப்பில் இருக்க மீதியெல்லாம் பேரூந்தின் தரையைத் துடைத்தது. எல்லோருக்குமே தர்மசங்கடமாக இருந்தது. மதுவாடை தாங்க முடியாமல் பேரூந்தில் இருந்தோர் மூக்கைப் பொத்திக்கொண்டனர். அடுத்த பேரூந்து நிறுத்தம் வரும்வரை ஓட்டுனர் எதுவும் பேசவில்லை. அமைதியாக வண்டியை ஓட்டினார்ஆனால் அந்த மனிதர் நடத்துனரின் சட்டையைப் பிடித்து இழுத்து வண்டியை நிறுத்தச் சொல்லி பலமாகக் கத்தினார்.

வண்டியில் இருந்த ஒரு அம்மா இந்த ஆர்ப்பாட்ட மனிதரிடம் கொஞ்சம் அதட்டலாகவே சத்தம் போடாதய்யா என்றதும் அந்த அம்மாவையும் விட்டுவைக்கவில்லை. அந்த அம்மாவை ஆவேசமாக கத்தித்திட்டினார். இத்தனைக்கும் இடையில் அடுத்த பேரூந்து நிறுத்தமும் வந்தது. அந்த பேரூந்து நிறுத்தத்தின் அருகே காவல் நிலையமும் இருந்தது. பேரூந்திலிருந்து இறங்கக்கூட திராணி இல்லாத அந்த மனிதரை காவல் துறையினரிடம் ஒப்படைத்தனர். பின்பு ஓட்டுனர் அமைதியாக வந்து பேரூந்தை ஓட்டினார்.

இவ்வளவு சேட்டைகள் செய்த போதும் அந்த மனிதர் மேல் கோபப்படாமல் அமைதியாக தன் கடமையை சரிவர செய்த ஓட்டுனரை நினைத்தாள் பஷ்மினி. ஆச்சரியமாகவும் பெருமையாகவும் இருந்தது. ஓட்டுனரின் மனப்பக்குவத்திற்கு நன்றியை மனதிற்குள் சொல்லிக்கொண்டே பஷ்மினி நடந்தாள். ஓட்டுனரின் பொறுமை கடலினும் பெரிது. இப்படியும் மனிதர்கள் உள்ளனர் என்பதை பொறையுடைமை எனும் அதிகாரத்தில் காண முடிகிறது.

> நடத்துனரின் சட்டையைப் பிடித்து இழுத்து வண்டியை நிறுத்தச் சொல்லி பலமாகக் கத்தினார்.

தன்னை மண்வெட்டியால் வெட்டிக் கிளறும் மாந்தரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல, தம்மை மனம் நோகும்படி இகழ்ந்து பேசுவோரையும் பொறுத்துக் கொள்பவரே மாந்தரில் தலையாய பண்பினை உடையவர் என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது. வலிமை மிக்கவனின் உண்மையான வலிமை என்னவெனில் அறிவில்லாதவர் செய்த தீங்கினைப் பொறுத்துக் கொள்ளல் என்று குறிப்பிடுகிறது.

எழுதியவர் :- யாழ் குகிழ்திரா விமலதாசன்
பக்க அனுசரணை: ஞானட்ணம் கிருபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகல் விளக்கு



நாவாந்துறை டா. அன்ரனி

அது ஒரு பூஜை அறை. மலர்களின் தூய்மையான நறுமணம் எங்கும் கமழ்கிறது. சாம்பிராணியினதும் புனித வாசனை தென்றலில் இணைகிறது. அத்தெய்வ சந்நிதானம் அமைதியின் இருப்பிடமாக விளங்குகிறது. எங்கும் பூரண அமைதி.

உலக சஞ்சாரங்களை ஊடறுத்துப் பாயும் தெய்வீக அருள் - கடவுள் இல்லையே என வாதிக்கும் நாஸ்திகனையும் தலை வணக்கச் செய்யும் தெய்வத் திருவருள் பாலிக்கும் அவ்விடத்தில்.

மங்கல தீபம் - அகல் விளக்கு ஒன்றுக்கு குலப் பெண்டிரின் வதனத்தில் ஒளிர்விடும் குங்குமச் சுடர் போல எரிந்து கொண்டிருக்கிறது.

சுடரிலிருந்து புனித ஒளிவெள்ளம் இருளின் அகன்ற வாயை ஊடுருவி அமைதியுடன் அந்த அறையில் பிரகாசித்தது. வெளிவிறாந்தையில் பிரகாசமான மின்வெளிச்சம் வீடு முழுவதையும் பகலாக்கி வைத்திருந்தது. விட்டில் பூச்சிகளை விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டிருந்த அதன் வெள்ளொளியின் முன், தெய்வீக பீடத்தில் கொலுவீற்றிருந்த சுடர் விளக்கு, இறுமாப்புடைய சந்திர ஒளியின் முன் நட்சத்திர பிளம்பு போல் காட்சிதந்தது.

மின்சாரவிளக்கிற்குப் பெருமை தாங்க முடியவில்லை. ஹா நண்பரே! தெய்வ சந்நிதானத்தில் கொலு வீற்றிருக்கும் அன்பரே! தெய்வத்தின் பாதத்திலேயே அர்பணித்துவிட்ட உன் வாழ்வுதான் என்ன! வரம் பெற்று வைகுண்டத்தையே நடுங்க வைத்த தவயோகிகளின் வலிமையென்ன?

நித்தம் ஒற்றைக் காலில் நர்த்தவம் செய்யும் உன் வாழ்வு தான் என்ன! நண்பரே சாரளத்தின் வழியே வீசும் இளம் தென்றலின் மிக மென்மையான ஸ்பரிசத்தைக் கூடத் தாங்கமுடியாமல் உயிர் மூச்சின் இறுதிவரை வினாடிக்கு வினாடி செத்துக் கொண்டிருக்கிறாயே, உன் அற்ப ஒளியில் நீ பூசிக்கும் அந்தத் தெய்வத்தின் திருமுகங்கள் கூட தெளிவாகத் தெரியவில்லையே. என்ன! உன் பெருமை! மின்சார விளக்கு இன்னும் பிரகாசமான ஒளிவெள்ளத்தைத் திறந்து விட்டுக் கடகடவென ஆர்ப்பரித்தது.

அகல் விளக்கிற்கு ரோசம் தாங்கமுடியவில்லை. இருந்தும் அடக்கிக் கொண்டு அமைதியாகப் பதிலளித்தது தகுதியை சரியாக எடைபோடத்தெரியாமல் இறுமாப்படைத் திருக்கும் நண்பரே நீரும் ஒளியை கொடுக்கிறீர்கள், நானும் என் கடமையைச் செய்கிறேன். தெய்வத்தின் அருள் வேண்டி அவன் திருவடிகளுக்குப் பாதபூஜை செய்த வரம் வாழ்வுக்குக் கிடைக்கும் பெருமையும் ஆபாசங்களால் கட்டி ஆளப்படும் மனித ஜடங்களைச் சேவிக்கும் உன் வாழ்வின் சிறுமையை அறிவாயோ? நீ சேவிக்கின்றாயே மனிதன் அவன் கூட என் தெய்வத்தின் திருப்பாதங்களைத் தொழுவதை அறிவாயோ? இயற்கையினால் அருள் பெற்று ஒளி கொடுக்கும் நான். உன்னைப் போல நவயுலகப் போலி மினுக்கில் குளித்தெழாமல் இருக்கலாம். ஆனால் நான் பண்டுதொட்டு வந்தவன். என்பதை மறந்துவிடாதே அகல் விளக்கு ஆவேசமாக பற்றி எரிந்தது.

அப்போது ஜில் என வீசிய இளந் தென்றல் மீண்டும் சாரளத்தின் வழியாக உட்புகுந்து விளக்கின் ஜோதியை அங்குமிங்குமாக அலைக்கழித்து தன் கோரக் கரங்களால் அணைக்கப்பார்த்தது. மின்சாரவிளக்கு எக்காளமிட்டுச் சிரித்தது. அகல்விளக்கு தன் நிலையை எண்ணி அமைதியாக அழுதது. இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்த மின்விளக்கு திடீரென அணைந்து விட்டது. எங்கும் இருள் மயம்.

'இந்தச் சனியன் பிடித்த லைட்டு எப்போதும் இப்படித்தான் அவசரமான காரியங்கள் செய்யும் போது கூட அணைந்து விடுகின்றது'. இது அந்த வீட்டுக்கார அம்மாவின் வசை மொழி. இப்போது மின்சாரவிளக்கு ஓலமிட்டது. நண்பரே அகல்விளக்கே! நீர் எங்கே இருக்கிறீர்? எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே! தெய்வ சந்நிதானத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த அகல்விளக்கு அமைதியாகச் சிரித்தது. அதன் சிரிப்பில் தெய்வீகத்தின் சாயல் ஒளிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலேட்

முழுசாக இருந்த சிலேட் விழுந்து உடைந்துவிட்டது. சிதறிய துண்டுகள் ஒன்றுக்கொன்று சண்டை போட்டன. யார்றா நான்தான் சிலேட் என்றது ஒன்று. முகரையைப் பார்! சிலேட்டாம் சிலேட் என்று மற்றது பரிகாசம் பண்ணியது.சிலேட் சட்டத்திலிருந்து விழாது நின்ற ஒரு பெரிய துண்டு மட்டும் உஸ் யாரங்கே சிலேட் துண்டுகளுக்குள் என்ன சண்டை என்றது.

சிலேட் துண்டுகளுக்குள்ளா? எல்லோரும் சிலேட் துண்டு தானா? என்ன ஓய்! அந்தச் சுவரையும் சிலேட் என்று சொல்லுமேன் கொ-ஞ்சம் வாட்ட சாட்டமாக இருந்தால் போல் உம்ம உளறலை நம்ப வேணுமோ நான் மட்டும் தான் இங்கே சிலேட் என் நெஞ்சைப் பார் எழுத்தெல்லாம் இருக்கு என்றது முதற் துண்டு. பெரிய துண்டு உன் நெஞ்சு எழுத்தைத் தானே பார்க்கிறாய். அதை வசனமாக பார்த்தாயானால்தானே தெரியும். அதன் தொடர் என் நெஞ்சிலும் இருக்கு அவன் நெஞ்சிலும் இருக்கே என்றது.

நீயும் உன் தத்துவமும் பாய்ந்தது முதற் துண்டு.பெரிய அகலமான துண்டு அந்தப் பாய்ச்சலுக்குப் பயந்து விட்டது. ஏன் என்றால் மற்ற துண்டுகளுக்கு இல்லாத ஒரு கூரான முனை கத்தி மாதிரி அந்த முதல் துண்டுக்கு இருந்தது. அந்த கூர்முனை கூட விழுந்து உடைந்ததால் ஏற்பட்டதுதானே. அதுவும் நீயும் நானும் அவனும் எல்லாமே ஒன்றாக இருக்கையில் அதுவும் இல்லை. நீ நான் அவனும் இல்லையே அந்த சட்டத்தில் சிலேட் ஒன்று தானே இருந்தது. என்றது பணிவோடு. கத்தித் துண்டுக்குப் பேசி மினக்கட பொறுமை இல்லை. பெரிய துண்டு ஏமாந்த சமயம் தாக்கும் பாவனையில் பாய்ந்தது ஆனால் தாக்கினால் அது தான் உடையும் சட்டத்தில் நின்றிருந்தால் பெரிய துண்டை அந்த பாய்ச்சலும் ஒன்றும் செய்திராது.

ஆனால் பயத்தில் பெரிய துண்டு சட்டத்தை விட்டு தடுமாறியது. விழுந்த உடனே ஒரு கதறலோடு இரண்டாக பிளந்தது இரண்டு புது துண்டுகளும் ஒன்றையொன்று கண்டன. என்னடா யாரென்று பார்க்கிறாய் நான் தான் இங்கே சிலேட் என்று துவங்கி விட்டன சண்டைக்கு.

இவ்வளவுக்கும் சிதறின சிலேட் ஒன்றிருக்கையில் அதை சுற்றி தழுவியிருந்த சதுர சட்டம் தூர நின்றது. அதன் சதுர வெளியில் மௌனம்.



டி.அரூப் ஸ்ரீசிவராம்




◈ **சுகாதார மாநாடு :** சாவதற்குப் பயப்படுவோர் கூடும் கூட்டம்.

◈ **தேர்தல்:** திட்டுவிழா.

◈ **திருமணம் :** கொடுக்கும் பணத்தை திருப்பி வாங்கும் திருநாள்.

◈ **விவாகரத்து:** ஒற்றுமையாக கோவிப்பது

◈ **கலைஞன் :** அழகைப் படைக்கத் தெரிந்தும் அழகாக வாழத் தெரியாதவன்.

◈ **புளுக்கொடியல்:** பற்களுக்கு அப்பியாசம் கொடுக்கும் 'றீல்' மாஸ்டர்.

◈ **நுளம்பு:** நகர சபையின் ஆஸ்தான சங்கீத வித்துவான்.

◈ **தேன்கூடு:** ஊழல் இல்லா கூட்டுறவுச் சங்கம்.

◈ **பிறந்த தினம்:** மரணயாத்திரையின் மைல் கல்.

◈ **நெப்தலின் உருண்டை:** கரப்பொத்தான் உருட்டி விளையாடும் பந்து



**நிருபர்** : நாட்டின் அரசியல் நிலவரம் எப்படி இருக்கின்றது?

**ஆசிரியர்** : நாடு பூரா ஒரே கலவரமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கதிர் பாலசுந்தரம்

# ஏழிற் செவ்வாய்

## கிளாக்கர் சிவகுமார் சொல்கின்றேன்.



ஏழிற் செவ்வாய்க்காரன் கதிரையைவிட்எழும்பிட்டான். குண்டன் என்னுடைய மேசைக்குத்தான் வருகின்றான். உவனொரு படித்த பேயன். நீலச் சேட் பொக்கற்றுக்குள் இருந்து போட்டோ எடுக்கிறான். பெம்பிளையைப் பாத்துத் தன்பாட்டில் சிரித்தபடி டொக்கு டொக்கு என்று வெகு உற்சாகமாக நடந்து வருகிறான்.

உவருக்குக் கண்டறியாத கலியாணத்துக்கும் ஆசை. கலியாணம் செய்யவும் பயம். கஜமுகன். நல்ல பொருத்தமான பெயர். உவருடைய கதை பிள்ளை யார் கலியாணக் கதை மாதிரித்தான். கிழட்டுப்பிள் ளைக்கு இப்போதுதான் மற்றவன் ஏன் கலியாணம் செய்கிறான் என்பது புரிந்திருக்கிறது. எந்தத் தரகன் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பிய போட்டோவை கையில் வைத்திருக்கிறானோ தெரியாது. என்னைத்தான் உவன் கஜமுகன் பார்க்கிறான்.

கழுதைஎன்டைமேசைக்குத்தான்வாறான். வந் தால் என்னை வேலை செய்யவிடான். முடிக்கவேண்டிய அவசர கேஸ்நாலு இருக்குது. தரகன்படம் அனுப்பியிருக் கிறான் மச்சான். பாத்தியா மச்சான் பெம்பிளையை... ஜெயலலிதா மாதிரி ... இவளைச் செய்தால் என்ன மச்சான்? இவளுக்கும் என்னைப் போல ஏழில் செவ்வாயாம் என்று உயிரை வாங்கப் போகிறான். நல்லதாப் போச்சுது. அந்தப் பக்கம் போகிறான். போகட்டும். ஓ! நல்லநாதனின் மேசைக்குத்தான் போகிறான். காலமை கந்தோருக்கு வேலைக்கு வந்தால் உவன் கஜமுகனுக்கு வேலை மேசைக்கு மேசை போய் பெம் பிளையின் போட்டோவைக் காட்டுறதும், கல்யாணக்கதை கதைக்கிறதும்தானே வேலை. உவன் ஒரு சைக்கோ கேஸ். நல்லநாதன்தான் உவனுக்குச் சரியான ஆள்.



கேட்பான் கேள்வி மோணிங் மச்சான் கஜமுகன். எப்படி மச்சான் உந்த முறுக்கேறின உடம்பையும் வைத்துக்கொண்டு இரவு காலத்தைக் கடத்தினாய்? உன்னோடதானே மச்சான்

நானும் கிளறிக்கலுக்கு எடுபட்டனான். எனக்கு மூன்று பிள்ளையாச்சு. பேத் கொன்றோளும் தொடங்கியிட்டன். மச்சான் கஜமுகன் கேட்கிறன் என்று கோபியாதை-உதென்னகையிலே?படமே?ஆர், தரகன் கருங்காலிக் கந்தையன்தான் அனுப்பினவனோ? தா. பார்ப்பம். ஏழில் செவ்வாய்க்காரிதானே?

யார்தான்என்னநக்கல்அடித்தாலும்உவனுக்கு ரோசம்வராது. கிளாஸ்ரூபாஸ்பண்ணியேஒன்பதுவருச மாகிறது. இப்ப இரண்டு மூன்று மாதமாகத்தான் உவன் கஜமுகனுக்கு உந்தக் கலியாணப் பயித்தியம் நல்லாக முத்தியிருக்குது. இந்தா கல்யாணம் முடிக்கிறன். அந்தா தாலிகட்டுறன் என்று புழுகித் திரிகிறான். உவனுக்கு என்ன குறை? கூனா? குருடா? செவிடா? முடமா? மாசாமாசம் அறுநூறு ரூபாவுக்கு மேலே சம்பளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவர் ரைம் வேறு. இரவு பகலாக உழைக்கிறான். யாருக்காக உழைக்கிறான்? தனிக்கட்டை. வீட்டிலே பாரமாக ஐயாவோ அம்மாவோ அக்காவோ தங்கச்சியோ தம்பியோ - யாருமே இல்லை. உவனைப்போல நான் இருந்தால் … காசுக்குக் காசு … வீட்டுக்கு வீடு … காரும் வாங்கிக்கொண்டு டாம் டாம் என்று கல்யாணம் செய்திருப்பன். படித்த மடையன். போறான் தன்னுடைய மேசைக்கு. மேசை முட்டிய பைல். அதைத் திறக்காமல் நாடிக்குக் கைகொடுத்தபடி கலியாணக் கனவு காணப்போகிறான்.

**கஜமுகனின் நியாயம்.**

சிவகுமார் சொல்கிறான் நான் படித்த மடையனாம். உவனைப் போலப் புத்தியில்லாதவனோ நான். வீட்டிலே இரண்டு குமர்கள் கொட்டாவி விட, கொழும்புச் செட்டிச்சியைக் கல்யாணம் முடித்திருக்கிறான். தன்னுடைய இளைய மச்சாளை - கொழும்புச் செட்டிச்சியை - நான் கலியாணம் செய்ய மறுத்துப்போட்டன் என்றுதான் உவன் தண்ணிச் சிவகுமாருக்கு என்னிலே எரிச்சல். நல்லநாதனிடம் உவன் என்னைப் பற்றிக் கேலியும் கிண்டலும் செய்கிறது எனக்குத் தெரியும். போகிறான் சிவகுமார் நல்லநாதனின் மேசைக்கு. என்னைப்பற்றி யோக் அடிக்கத்தான் போகிறான். நான் உவன் சிவகுமாரைப் போல முட்டாளே? எனக்கு ஐயா, அம்மா, தங்கச்சி இல்லைத்தான். இருந்தாலும் எனக்கு என்ன குறை? அண்ணையும் அண்ணியும் இருக்கிறார்கள்தானே? அண்ணை கலியாணம் முடிச்ச வருசம் நான் ஆறாம் வகுப்புத்தானே படித்தனான்.


தகப்பனுக்குத் தகப்பனாக, தாய்க்குத் தாயாக என்னை வளர்த்துப் படிப்பித்து ஆளாக்கியது அண்ணரும் அண்ணியுந்தானே? தோட்டத்துக்கை மாய்ஞ்சு மாய்ஞ்சு உழைச்செல்லே படிப்பித்தவை. அண்ணை பாவம்! வலிச்சல் உடம்போடு மாடாய் உழைக்கிறார். அண்ணி இரவு பகலாக உழைச்சு ஓடாய்க் காஞ்சு போனா. அண்ணி, தங்கமான குணம். நான் அவவுக்கு மச்சான் முறைதான். இருந்தாலும் அவ சகோதரி போலத் தானேஎன்னோடுபழகிறவ. தம்பிஎன்றுதான்அழைக்கிறவ. தம்பி தம்பி கஜமுகன், இஞ்சை வாரும், ஒரு கதை. கொழும்பு கெட்டவிடம் எண்டு எல்லாரும் சொல்லுகினம். கவனமாக இருக்கவேணும் தம்பி.

தம்பி கஜமுகன், நான் சொல்லுறன் எண்டு குறை நினையாதையும். காசை வீண் செலவு செய்யாமல் முந்தியைப் போல மாதம் மாதம்… என்ன தம்பி. என்று அண்ணி நான் போன லீவிலே ஊருக்குப் போன சமயம் எவ்வளவு அக்கறையோடு புத்தி

## உங்கள் வளர்ச்சிக்கு இடையூறு நான்

ஒரு நாள் அலுவலகத்தில் வேலை செய்யும் பணியாட்கள் நோட்டீஸ் போர்டில் ஏதோ எழுதி இருக்கிறதே என்று பார்க்கச் சென்றார். அதில் "உங்கள் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்த நபர் நேற்று காலமானார். அடுத்த கட்டிடத்தில் அவர் உடல் வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும்" என்று எழுதியிருந்தது.

நம் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த நபர் யாராக இருக்கும் என்று ஆர்வம் ஏற்பட்டது. அனைவரும் அடுத்த கட்டிடத்திற்குச் சென்றனர். சவப்பெட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஒருவர் பின் ஒருவராக செல்ல ஆரம்பித்தனர். சவப்பெட்டியை நெருங்க நெருங்க நம் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தவன் யாராக இருக்கும் நல்ல வேளை அவன் இறந்துவிட்டான் என்று நினைத்தபடியே முன்னோக்கிச் சென்றனர்.



சவப்பெட்டியினுள் எட்டி பார்த்தவர்களுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அதில் ஒரு முகத் பார்க்கும் கண்ணாடி மட்டுமே இருந்தது. சவப்பெட்டியுள் யார் எல்லாம் பார்க்கிறார்களோ அவர்கள் முகமே அதில் தெரிந்தது.

கண்ணாடி அருகில் ஒரு வாசகம் எழுதி இருந்தது. "உங்கள் வளர்ச்சிக்கு நீங்கள் மட்டுமே காரணம் ரூபவ் நீங்கள் வளர வேண்டும் என்றால் அது உங்கள் கையில் மட்டுமே உள்ளது. உங்கள் வளர்ச்சியை உங்களைத் தவிர வேறு யாராலும் தடுத்து நிறுத்த முடியாது "என்றிருந்தது. உங்கள் வாழ்க்கையை உங்கள் முதலாளியால் மாற்ற முடியாது. உங்கள் நண்பர்களால் மாற்ற முடியாது. நீ நினைத்தால் மட்டுமே உன் வாழ்க்கையை மாற்ற முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மெயில்வாகனத்தார் – தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் எப்படி இருக்கிது?**
**ஒய்யப்பங்கங்காணியார் – போராட்டம் எல்லாம் முடிஞ்சு இனி சாமியாட்டம் தான் போல கிடக்கு.**

சொன்னவ. அண்ணிக்கு என்னிலே எவ்வளவு பாசம்? நான் லீவிலை யாழ்ப்பாணம் போனால் எவ்வளவு உரிமையோடு கவனிக்கிறவ. எனக்கு நண்டுக் கறியும் இறால் சொதியும் நல்ல விருப்பம் என்று, எவ்வளவு அக்கறையோடு அண்ணனை அச்சுவேலிச் சந்தைக்கு அனுப்பிப் பன்னிரண்டு மணிக்கே சமைத்து முடிக்கிறவ. போன மாதம் ஊருக்குப் போயிருந்த சமயம் எனக்குக் கலியாணம் பிந்துது என்று அண்ணி எவ்வளவு கவலைப்பட்டவ. பாவம்! தம்பி கஜமுகன், உம்முடைய கல்யாணம் பிந்துது என்று எனக்கு எவ்வளவு கவலை தெரியுமே? கொண்ணருக்குங்கூடச் சரியான மனக்கஷ்டம், தம்பி.

ஊரிலே உள்ள வளவையெல்லாம் நெழிக்கிறாளவை. எல்லாக் கல்யாணத்தையும் நான்தான் குலைக்கிறனாம். அண்டைக்கு உன்ரை மாமி சின்னம்மா நெத்திக்கு நேரே என்னைக் கேட்டவ. உனக்கென்னடி இராசாத்தி இரண்டு உழைப்பெண்டு. பாவம் அண்ணி! நரம்பில்லாத நாக்காலே உலகம் எதைத்தான் கதைக்காது? அன்றைக்கு அவ குசினிக்குள்ளேயிருந்து அழுத அழுகை. என் கண்களே கலங்கிவிட்டன. எனக்கு ஏழிற் செவ்வாயாம் என்று அண்ணி சொல்கிறா. அதுதானாம் கல்யாணம் பிந்துதாம். ஏழிற் செவ்வாய்க்காரனுக்கு முப்பது முப்பத்தைந்து வயதுக்கு மேலேதான் கல்யாணம் நடக்குமாம். சிலபேருக்கு கல்யாணமே நடக்காதாம்.

உதைத் தெரியாமல் ஊரிலையுள்ள பெம்பிளையள் எல்லாம் நொடிக்கிறாளவை. பாவம் அண்ணி! போன லீவில ஊரிலே நின்ற பொழுது மூத்த பெட்டையள் இரண்டு பேருக்கும் நகையிருக்குது. இளையவள் நகுலத்துக்குத்தான் சங்கிலியாவது இல்லை என்று எவ்வளவு கவலைப்பட்டவ.

அடுத்த முறை ஊருக்குப் போறபொழுது ஒரு மூன்று பவுணிலே ஒரு சங்கிலி வாங்கிக்கொண்டு போகவேண்டும். சீட்டுக் காசு போதும். அண்ணனுடைய இரண்டாவது பெட்டை கமலம் - அவளுக்கு என்னிலை எவ்வளவு அக்கறை. கிழமை தப்பினாலும் கடிதம் தவறாமல் சுகங்கேட்டு எழுதுகிறவள். சித்தப்பா, உடம்பைக் கவனமாகப் பார்க்கட்டாம். உங்களுக்கு உலகம் தெரியாதாம். வீண் கூட்டத்தோடு சேர்ந்து வீண் செலவு செய்து பழக வேண்டாமாம் என்று அம்மா எழுதச்சொன்னவ என்று நேற்றைக்கு வந்த கடிதத்திலையும் கமலம் எழுதியிருந்தவள்.

லீவுக்குப் போறசமயம் என்னுடைய தண்டையன் வடலித் தோட்டத்தைத் தனக்கு எழுதித் தரச்சொல்லி கமலம் நெடுகக் கரைச்சல். எனக்குத்தானே வீடு வளவு காசெல்லம் சீதனமாகக் கிடைக்கும். அடுத்தமுறை லீவிலே போகிற சமயம் அந்தத் தோட்டத்தை அவளின்ரை பெயருக்கு எழுத வேணும். எனக்கும் வயது முப்பத்திரண்டு முடிஞ்சுவிட்டது. இனிமேல் ஏழிற் செவ்வாய் ஒன்றும் செய்யாது. விரைவிலே கலியாணம் முடிந்துவிடும்.

அந்த நீர்வேலிச் சம்பந்தம் சரிவந்தால்.... பெம்பிளைக்கும் ஏழிற்செவ்வாய். நல்லநாதன் சொல்கிறது போல உடம்பு கொஞ்சம் அதிகமாக முறுக்கேறித்தான் போச்சுது. சாப்பாட்டைக் கொஞ்சம் குறைக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் தசை போடுகிற கூச்சலையும் கும்மாளத்தையும் அடக்கமுடியாது.



தரகன்கந்தையனிடம் எத்தனை முறை சொல்லிவிட்டேன். ஒரு கடிதம் எழுதி நினைப்பூட்டுவம். நீர்வேலிச் சம்பந்தத்தை ஒருமாதிரி ஒப்பேற்றச் சொல்லி. ஏன்தான் என்ரை கலியாணம் உப்படி இழுபடுதோ?

**தரகன் கந்தையன் முறைப்பாடு**

என்னைப் பொய்யனாம்.போயும் போயும் வயிற்றுப் பிழைப்புக்காகத் தாளம் போடுகிற கலியாணத் தரகன் நான். என்னுடைய தொழில் பொய் புரட்டில்தானே தங்கியுள்ளது. அதைப் புரிந்து கொள்ளாமல், கஜமுகனின் அண்ணன் முருகேசு என்னை - கருங் காலிக் கந்தையன் பொய்யன் என்று வசைபாடுகிறார். தரகர்கள் எல்லாம் பொய்யர்கள் தான்.

அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. நாங்கள் பொய் சொல்லாவிட்டால் இதுவரை எத்தனை குமர்கள் வீட்டுக்குள்ளேயே கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கும்? பொய் சொல்லி நான் என்னத்தைக் கண்டனான்? அப்பு ஆச்சி தந்த மண் குடிசையும், பனையடைப்புந்தான். காற்றுக்கு கங்கு மட்டையும் விழுகுது. உந்த முற்றத்துப் பனையைத் தறிப்பிக்க வேணும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதுக்கெல்லாம் எனக்குக் காசு ஏது. முருகேசுவைப் போல எனக்கு இரண்டு உழைப்போ. என்ன? நான் தரகன்தான். பொய்யன்தான். இருந்தாலும் முருகேசுவைப் போல நெஞ்சுக்குள்ளே நஞ்சுக்கட்டியைத் திரட்டி வைத்துக் கொண்டு, சொந்தத் தம்பிக்கே துரோகம் செய்கிற சாதியில்லை நான். பாவம் கஜமுகன். கடிதம் எழுதியிருக்கிறான். நீர்வேலிச் சம்பந்தம் ஏன் சுணங்குகிறதாம். மடைப் பெடியன் இந்தக் கடிதத்தை முருகேசுக்குக் காட்டத்தான் வேணும். கஜமுகன் லீவிலே வருகிற சமயங்களில் ஒன்றோ இரண்டோ ரூபா வாங்கத்தான் நான் கஜமுகனுக்காகப் பரிந்து பேசுகிறேன் என்று நினைக்கவேண்டாம். கஜமுகனின் தமையன் முருகேசு அப்படித் தான் நினைக்கிறார். முருகேசு வடலி வளவுக்குள் உளுப்பெடுத்த மண் வீட்டில் வசித்த சமயம். கஜமுகனுக்குக் கலியாணம் பேசத் தொடங்கினனான். அவர் மெயின் றோட்டோரம் காணி வாங்கிக் கல்வீடு கட்டியும் ஐந்து வருசமாகிவிட்டது.

இப்பவுந்தான் கஜமுகனுக்குக் கலியாணம் பேசி அவர் வீட்டுப்படி ஏறியிறங்கிறன். நீர்வேலிச் சம்பந்தம் சரி வந்தால் எனக்கும் ஒரு பெரிய தொகை இரண்டு பகுதியாலும் கிடைக்கும். கஜமுகனுக்கும் நல்லது. இல்லாவிட்டால்? பெடியனும் வேள்விக்கு வளர்க்கிற கிடாய் மாதிரிக் கொழுத்திருக்கிறான். எவளாவது கொழும்பாள் பெடியனை வழுக்கி விளச்செய்தால் எனக்குக் கிடைக்கிற தரகுக் கூலியும் கிடைக்காமல் போயிடும். பேய்ப் பெடியனாக இருக்கிறான். அண்ணி அண்ணி - அண்ணன் அண்ணன் என்று சாகிறான்.

அண்ணனும் அண்ணியும் விரும்பினால்தான் கலியாணம் செய்கிறதாம். தமையனோடு கதைக்கப் பயம். என்னைத் தூது போகட்டாம். அண்ணன் அண்ணனாக இருந்தால்தானே முருகேசு மனுசியின் தலையணை மந்திரத்துள் சிக்கி, எல்லாக் கலியாணத்தையும் குழப்புகிறார் என்பது எனக்குத் தெரியாதா. என்ன? தம்பி கஜமுகன்மீது உயிரை வைத்திருக்கிறதாக முருகேசு கூறுகிறார். எல்லாம் வெறும் நடிப்பு.



**அண்ணன் முருகேசு சொல்கிறேன்**

நான் நடிக்கிறேனாம். தரகன் கருங்காலிக் கந்தையன் அப்படித்தான் கூறித்திரிகிறான். ஊரும் அப்படித்தான் குசு குசுக்கிறது என்று கேள்வி. என்னுடைய மூன்று குமர்களுக்கும் உழைப்பிக்கத்தான் தம்பி கஜமுகனின் கலியாணத்தைத் தட்டிக் கழிக்கிறேனாம். தரகர்பிள்ளைக்குத் தம்பியின் குறிப்புத் தேவைப்படுகிறதாம். இப்ப உந்தத் தரகர் எல்லாம் குறிப்பைக் கையிலே வாங்கி அதற்கேற்றபடி பெம்பிளைக்குச் சாதகம் எழுதி, உலகத்தை ஏமாற்றுகிறது எனக்குத் தெரியாதோ. என்ன? பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்கிற கருங்காலிக் கந்தையன் என்னை நடிகனாம். இந்த வீட்டைக் கட்ட நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். தம்பியின் உழைப்பிலேதான் நான் வீட்டைக் கட்டினதென்று உவன் கந்தையன் ஊரெல்லாம் சொல்லித் திரிகிறான். இன்னும் ஏதேனும் சொல்வான். உந்தத் தரகனே தம்பியைப் படிப்பித்தவன்? ஐயாவும் அம்மாவும் செத்த பிறகு நான்தானே படிப்பித்து உத்தியோகமாக்கினனான். தம்பி கஜமுகனிலே தரகன் கந்தையனுக்கு இருக்கிற கரிசனை எனக்கில்லையோ? எனக்கிருக்கிற ஒரே இரத்த பாசம் அவன்தானே? போன வருசம் சுகமில்லாமல் தம்பி கஜமுகன் கொழும்புப் பெரியாஸ்பத்திரியில் படுத்திருந்த சமயம் நான் என்ன பாடுபட்டனான்.

தோட்ட வேலையையும் விட்டுப் போட்டு, ஓடோடிப் போய் கொழும்பிலே ஒரு கிழமை தங்கி நின்று தம்பியைப் பார்க்கவில்லையோ? மாதம் மாதம் வருகிற மணியோடருக்காகத்தான் நான் கலியாணங்களையெல்லாம் தட்டிக் கழிக்கிறனாம். கஜமுகன் அனுப்பிய பணத்தை நான் வீடு கட்டவும் கடன் கொடுக்கவும் எடுத்துப் போட்டன்தான். அவனுக்குத் தேவைப்படுகிற சமயம் கொடுப்பன்தானே. அதனைக் கேட்க உந்தத் தரகனுக்கும் ஊர வைக்கும் என்ன உரிமை? யாரை நம்பினாலும் தரகர் மாரை நம்பக் கூடாது. தரகர்கள் கொண்டுவருகிற சம்பந்தம் எல்லாம் கூனும் குருடும் சொத்தியுந்தான். அவற்றைப் பற்றி விசாரிக்கப் போனால் வேலி பாய்ந்த கதையெல்லாம் வெளிவரும். எல்லாம் சரிவந்தால் சீதனம் பிச்சைத்தனமாகவிருக்கும்.

நான் அவனுக்குக் கலியாணம் செய்து வைப்பேன் தானே. ஏன் உவன் கந்தையன் அக்கப்பாடுபடுகிறான்? இன்றைக்குப் பொழுதுபடுகிற நேரம் என்னைத் தேடி வந்த தரகன் கந்தையன் இந்த ஹோலில் - உந்தக் கதிரையில் இருந்தபடிதானே எத்தனை பெரிய பொய் சொன்னவன். கஜமுகனுக்கு நீர்வேலிச் சம்பந்தத்திலே பூரண விருப்பமாம். பெம்பிளைக்கும் ஏழிற் செவ்வாயாம். கடிதம் எழுதியிருக்கிறானாம். அண்ணன் குறிப்புத் தர மறுத்தால் நான் வந்து வாங்கித் தருகிறேன் என்று தரகனுக்குக் கஜமுகன் கடிதம் எழுதியிருக்கிறான். வந்தாலும் வருவான் தம்பி. உவன் இப்ப கொஞ்சக் காலமாக ஆளே மாறிக் கொண்டு போகிறான். மூன்று மாதமாகக் காசும் அனுப்பவில்லை.

கஜமுகன் திடீரென வந்து குறிப்பைக் கேட்டால்? உவனுக்குத் தான் என்ன நட்சத்திரமென்றே தெரியாது. அல்லாவிட்டால் இவ்வளவு காலத்திலும் தனது குறிப்பைப் பாராமல் இருப்பானா? வந்து குறிப்பைக் கேட்டால்? பார்ப்பித்தால்? பிறகு? ... ஓம். அப்பிடித்தான் செய்ய வேண்டும். ஒரு புதுக் குறிப்பைப் பனை ஓலையில் எழுதுவித்து நெல்லுப் பானைக்குள் போட்டு அவித்து வைப்பம். இல்லாவிட்டால் இவ்வளவு நாளும் நானும் மனுசியும் சேர்ந்து தனக்கு ஏழிற் செவ்வாய் என்று ஏமாற்றிப் போட்டம் என்று நினைப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிளில் சந்தைக்கு திரிஞ்ச அனுபவம்

சிரிகதை



கந்தர்மடத்தடில இருந்து பலாலி றோட்டால போய் மதவடி லேனுக்க சைக்கிளை திருப்பினா, அப்பிடியே மூண்டு முறிப்போட அது போய் ஆடியபாதம் ரோட்டில மிதக்கும். அந்த மதவடி லேனில போகேக்க நாயொண்டு கோழிக்கால் ஒண்டை கவ்விக்கொண்டு குறுக்க ஓடும்.

தலைக்கு மேலால பறக்கிற காகத்தில கூட இறைச்சி மணம் அடிக்கும். ஏனெண்டா அந்த மதவடி லேன்-ஆடியபாதம் ரோட்டு முடக்கோட தான் ஆட்டிறைச்சி கடை, கோழி இறைச்சிக்கடை மட்டுமில்லாம கோழி விக்கிறவை, கோழி உரிக்கிறவை எல்லாரும் இருப்பினை.

ரோட்டெல்லாம் கோழி இறக்கை பறந்து கொண்டிருக்கும். எப்பன் மூக்கை பொத்திக் கொண்டு சைக்கிளை இறுக்கி உளக்கினா, அங்க மூலையோட நாலு பெட்டிக்கடை வரிசையா பரப்பி இருக்கும்.

இண்டைக்காவது பற்றரி விலை அஞ்சு ரூபா எண்டாலும் குறைஞ்சிருக்குமோ எண்டு பாத்தா, ஊஹூம்... அதே தான். பெரிய பற்றரி ஒரு சோடி 80 எண்டு கறாரா சொல்லிவினை. "தேங்காயை தட்டிப் பாத்து வாங்கோணும்" "வெண்டிக்காயை முறிச்சு பாத்து வாங்கோணும்" எண்டு சொல்லித் தந்த அதே யாழ்ப்பாணத்தான் தான் "பற்றரியை உருட்டிப் பாத்து வாங்கோணும்"

எண்டு சொல்லித் தந்தவை. பொலித்தீன் கவருக்கால பற்றரியில ஊசி குத்தின அடையாளம் இருக்கா எண்டு கண்டிப்பா பாக்கோணும். அதுவொரு எஞ்சினியரிங் டெக்னோலொஜி. சொல்லி விளங்காது.

ஒரு சோடி பற்றரியை வாங்கிக் கொண்டே 6 இஞ்சி எஸ்-லோன் பைப்புக்க செருகி, சின்னதா ரெண்டு வயரால தொடுப்பு குடுத்தா, அந்த 9-**Band** ரேடியோவில குறைஞ்சது ரெண்டு மாசத்துக்கு வெரித்தாஸ் நியூசும், பிபிசி நியூசும் வடிவா கேக்கலாம். அடுத்த கடையை சாடையா லுக்கு விட்டா, அங்க 'இ' கார்ட் காரருக்கு சங்கக் கடையில நிவாரணம் எண்டு சும்மா குடுத்த ஹைலேண்ட் பால்மாவும், விட்டா மில்க் பால்மாவும் 30 ரூபாவுக்கு போட்டிருந்தாலும் தேடுவாரில்லாம கிடக்கும். சந்தனம் மெத்தினா அங்க இங்க தடவின கதை மாதிரி, 30 ரூபா ஹைலண்ட் டை வாங்கி ஊர்ப் பொம்பிளையள் வஞ்சகமில்லாம அடிக்கடி வீட்டில மில்க்டொபி செய்யினை.

ஆடியபாதம் ரோட்டு முழுக்க ரெண்டு பக்கமும் ஒரே பழக்கடை தான் இருக்கும். இடையில ரெண்டொண்டு வெத்திலைக் கடை. அனேகம் வாழைப் பழக் கடையள் தான் கூட. ஒரு சீசனுக்கு கதலிக் குலை ஒண்டு 40 ரூபாவுக்கும், இதரைக் குலையொண்டு 65 ரூபாவுக்கும் வந்தது நினைவிருக்கு. புன்னாலைக் கட்டுவன் முந்திரிய பழமும் இங்க கிராக்கியா கிடைக்கும். மாட்டுவண்டிலில வெச்சு விக்கிற வெள்ளரிப் பழத்துக்கு மட்டும் சனம் கொஞ்சம் முண்டியடிக்கும். இதெல்லாத்தையும் அலசி ஆராய்ஞ்சு கொண்டு சைக்கிளை உருட்டிக்கொண்டு தின்னவேலிச் சந்திக்கு கிட்ட வாற வரைக்கும் கண்ராவி.... சைக்கிளை விட ஒரு சுக்குணி இடம் இல்லையப்பா.



அப்பதான் மூளையை கொஞ்சம் யூஸ் பண்ணோணும். கண்ணன் ஸ்டோருக்கு முன்னால சனத்தோட சனமா போய் சைக்கிளை மெதுவா பார்க் பண்ணிடோணும். அந்தக் கடையில நிக்கிற ஐயா சைக்கிள் விடுறதை கண்டா பேசிப்போடுவார். 'கஸ்டமர் பார்க்கிங்'காம் அந்த இடம்.

ரஞ்சித் தவா.
பிராம்படன். கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவழியா சைக்கிளை விட்டுட்டு, வந்த வழியில திருப்பி நடந்து வர, ரோட்டுக்கரையில தெரிஞ்ச ஒருத்தர் தேங்காய் வித்துக்கொண்டு நிப்பார். பெரிய தேங்காய் 7 ரூபா, இடைமட்ட சைசுக்கு 6 உம், சின்ன சைஸ் தேங்காய் 5 ரூபாவும் சொல்லுவார். அதிலும் இதிலுமா கலந்து ஒரு நாலஞ்சை பொறுக்கி எடுத்திட்டு, நாலா மடிச்சுக் கொண்டுபோன உரப்பையை நீட்ட அதுக்க அவர் அள்ளிப் போட்டு விடுவார். ஒரு ரெண்டு ரூபாயை பிடிச்சுக்கொண்டு குடுத்தாலும் சந்தோசமா வாங்குவார். நைஸ் மனுசன்.

அப்பிடியே எட்டி கீரைக் கடை வாசலுக்கால சந்தைக்குள்ள போனா அந்தக் கீரையின்ர வேர் வாசமும், மண்ணோட சேந்து மணக்கிற மரவள்ளி வாசமும் வலு அமர்க்களமாத் தான் இருக்கும்.



எப்பவும் சந்தைக்கு போனா எப்பன் பசியோட போகோணும் எண்டது எழுதப்படாத விதி. அப்பதான் அந்த மரக்கறி வகையளை கொஞ்சம் ஆர்வமா ஆசையா பொறுக்கலாம். நல்லா வயிறு முட்ட திண்டிட்டு போனா ஒண்டையும் வாங்க மனம் வராது. குமட்டிக்கொண்டுதான் வரும்.

பொறுங்கோ... கதையை விட்டு எட்டி வேற எங்கையோ போறன் போல... எங்க விட்டனான்?
ஆ.. சந்தைக்க நுழையுற சீன்.

சந்தை வாசல்ல, வரிசையா கீரைக் கடையள் தான். ரெண்டு ரூபா சொன்ன கீரையை கையில தூக்கி கிழவியிட்ட, 'ஒரு ரூபாய்க்கு தாறியா ஆச்சி?' எண்டு கேக்க,

"ஏன் தம்பி.... கீரையை சும்மா தாறன் கொண்டு போவன்" எண்டு கிழவி கிண்டலாய் சொல்லும்.

'சரி சரி கோவியாம பிடியணை' எண்டு ரெண்டு ரூபாயை குடுத்திட்டு, அப்பிடியே நிமிந்தா பக்கத்தில ஊதுபத்தி வியாபார கடை சூப்பர் வாசமா இருக்கும். அதுக்கு முன்னால இருக்கிறவரிட்ட மட்டும்தான் பால் வெண்டிக்காய் வாங்கியரோணும் எண்டு வீட்டில கண்டிஷன் போடுற அளவுக்கு விலையும் தரமும் இவரிட்ட நல்லதாம்.

அப்பிடியே வரிசையா போனா பச்சை மிளகாய் கத்தரிக்காய், அது இதெண்டு போய் கடைசில, அங்க தொங்கல்ல ஒரு மிருசுவில் ஆச்சியிட்ட போய் வெங்காயம் வாங்கிறது வழக்கம். என்னைக் கண்டோண்ண அந்த ஆச்சிக்கு தெரியும் எது வேணும் எவ்வளவு வேணும் எண்டு. கிளறி எடுத்து நல்லதா பருமனா கொஞ்ச வெங்காயத்தை நிறுத்து என்ர கூடையில தராசோட கவுத்து கிழவி தானே கொட்டி விடும்.

**தேங்காயை தட்டிப் பாத்து வாங்கோணும் வெண்டிக்காயை முறிச்சு பாத்து வாங்கோணும் எண்டு சொல்லித் தந்த அதே யாழ்ப்பாணத்தான் தான் பற்றரியை உருட்டிப் பாத்து வாங்கோணும் எண்டு சொல்லித் தந்தவை. பொலித்தீன் கவருக்கால பற்றரியில ஊசி குத்தின அடையாளம் இருக்கா எண்டு கண்டிப்பா பாக்கோணும். அதுவொரு எஞ்சினியரிங் டெக்னோலொஜி. சொல்லி விளங்காது.**

அதுவும் மழைநாள் எண்டா பாதை முழுக்க ஒரே சேறும் சகதியுமா தான் இருக்கும். ச்சே... சப்பல் அரியண்டம். கத்தரிக்காயை விலை தீர்த்து முடிக்க முந்தி கடியெறும்பு காலை நல்லா பதம் பாத்திரும். அதைக் குனிஞ்சு சொறிஞ்சா முன்னால தொங்குற தராசு மண்டையை பதம் பாத்திரும். சேத்தில பிரளாம காலை அகட்டி வெச்சு, சறக் கெண்டு கால் வழுக்கிக்கொண்டு போய் தக்காளிக்க கொட்டுண்ட கதை பெருங்கதை.

அப்பிடியே கொள்வனவை ஒருவழியா சிவனே எண்டு முடிச்சுக்கொண்டு மேற்கால போனா, லைட்டா சாம்பார் வாசம் மூக்கை துளைக்கும். அது ஒரு தேத்தண்ணி கடையின்ர பின் பக்கம். அந்தக் கடைக்குள்ள போய் ஒரு வடையும் பால் தேத்தண்ணியும் வாங்கி குடிச்சிட்டு வராட்டி ஏனோ அண்டைக்கு பத்திய படாது.

சரி... இனிப்போய் சைக்கிளை எடுத்துக் கொண்டு கெதியா கிளம்புவம். 'லங்கா முடித" வில வந்த மா சிலநேரம் சங்கத்துக்கு இண்டைக்கு வருமெண்டு கதைக்கினம். போறவழியில செக் பண்ணிக்கொண்டு போகோணும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பிரமுகர்



இப்படத்திலுள்ள இலங்கைத் தமிழ் அரசியல்வாதியின் முகத்தை சரியாகக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம். அவ்வாறு கண்டு பிடித்தால் அவரின் பெயரை சிரித்திரனின் editor@siriththiran.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றிபெறும் அதிஸ்ரசாலி ஒருவருக்கு சிரித்திரனின் பெறுமதியான பரிசில் வழங்கப்படும்

இருபத்தோராம்நூற்றாண்டில்வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் எதற்கெடுத்தாலும் தொழிட்நுட்ப விஞ்ஞானத்தின் போக்கிலே போய்க்கொண்டிருக்கிறோம் என்பது நாம் அறிந்த ஒன்றே. இக் காலகட்டத்தில் தொழிட்நுட்பப் பயன்பாடு முக்கியமாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும் அது தேவையல்லஎன்பது உண்மை. அதனுள் ஒன்றுதான் விவசாயம். விவசாயத்திலும் பல்வேறு விதமான தொழிட்நுட்பங்களை பயன்படுத்தியதால் தான் இன்று உலகம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது



நம் முன்னோர்கள் எத்தனையோ ஆண்டுகளாய் செய்து வந்தது இயற்கை விவசாயமே. ஒரு இயற்கை விவசாயி இயற்கையுடன் இணைந்து விவசாயம் செய்து மண்வளம், சுற்றுச் சூழ்நிலை, சுகாதாரம் ஆகியவைகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கொடுப்பவன் ஆவான். இயற்கை வேளாண்மை என்பது செயற்கை உரம், செயற்கை பூச்சிகொல்லி மருந்துகள், செயற்கை வளர்ச்சி ஊக்கிகள் ஆகியவற்றை முற்றிலுமாக தவிர்த்து பயிர்சுழற்சி, பசுந்தாள் உரம், மக்கிய இயற்கை உரம், உயிரியல் (பூச்சி, நோய் மற்றும் களை) நிர்வாகம் போன்ற இயற்கை சாகுபடி முறைகளை அடிப்படையாக கொண்ட ஒரு வேளாண்மை (விவசாய) முறைமையாகும். இயற்கை விவசாயம் என்பது சுற்றுச் சூழலுடன் ஒத்துப்போய், அதற்கு கெடுதல் விளைவிக்காத தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, நல்ல விளைச்சல் விளைச்சல் எடுப்பதுடன், விவசாயத் தொழிலாளிகளுக்கும் எவ்வித கேடும் வராத அளவில் செய்யும் விவசாயமாகும். இயற்கை விவசாயத்தில் உள்ளடங்கும் செயல்களாவன பயிர்களின் கழிவுகளை சிதையச் செய்தும், பண்ணை கால்நடைகளின் கழிவுகளையும் மட்டுமே உரமாகப் பயன்படுத்துதல்.



பயிர்ச் சுழற்சி முறையில் பயிர்களைப் பயிரிடுதல். மண்ணிற்கு மேல் மண்ணின் ஈரம் ஆவியாகி வீணாகாமல் தடுத்தல், நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியுள்ள பயிர்களைத் தேர்ந்தெடுத்தல், இயற்கை பூச்சிகொல்லிகளை உபயோகித்தல் இவை தவிர நல்ல நீர் மேலாண்மையும் நல்ல கால்நடைகளை வளர்ப்பதும் இன்றியமையாதவை. நீர் மேலாண்மையும் என்பது அனைத்து குளங்களையும், குட்டைகளையும், வாய்க்கால்களையும் தூர் எடுக்கவும், ஆழப்படுத்தவும் செய்தல் ஆகும்.



## சுற்றாடல் நம் கையில்

ஏனெனில் இவையே விவசாயத்திற்கு தேவையான நீரின் மூலம் ஆகும். நல்ல கால்நடைகளை வளர்ப்பது என்பது மாடு மற்றும் எருமையினங்கள், ஆடுகள், கோழிகள்,பன்றிகள்,மீன்கள் போன்ற விலங்குகளை வளர்ப்பதும்,அவற்றிலிருந்து கிடைக்கும் பால்,மாமிசம் போன்றவற்றை உணவாகவும், அவற்றின் கழிவுகளை இயற்கை விவசாயத்தில் உரமாகவும் பயன்படுத்துதலும் ஆகும். இவற்றை நாம் உணர்ந்து எதிர்கால சந்ததிகளை இயற்கை விவசாயத்தில் ஈடுபடுத்தி "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாக" வாழ வழிகாட்டுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்லாட்சி

மனித வளத்தின் மேம்பாடாக சொற்கள் இருக்கின்றன. சொற்களை நாம் உரிய முறையில் பயன்படுத்தும் போது எமது உரையாடலும் எழுத்துக்களும் வளம் பெறுகின்றன. சொற்களால் நாம் உலகத்தையும் எம்மையும் உருவாக்க முடியும்.

எமது ஆசிரியர்கள் பாடசாலை காலங்களில் புதிய சொற்களை எமக்கு அறிமுகம் செய்வார்கள். எமது ஆரம்பப் பாடசாலை நாட்களில் ஆசான் திரு.மூர்த்தி எனும் ஆசிரியர் தமிழ்ச் சொற்களை அபிநயத்துடன் சொல்லித் தருவார். புதிய சொற்களை நாம் அறியும் போது அதில் சுவையும் இனிமையும் இருந்தது.

அவ்வாறு புதிய சொற்களை கையாளும் போது அவை எம்மையும் ஒரு வளமுள்ள மனிதனாக்குகின்றது. சொற்களைப் பயன்படுத்தி புதுமையாக எழுதுபவர்கள் விரும்பத்தக்க எழுத்தாளர்களாகின்றனர்.

திருக்குறளில் கூறப்பட்டது போன்று

**"சொல்லுக சொல்லை பிறிதோர் சொல் அச் சொல்லை வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து"**


நாம் சொல்ல நினைத்த சொல்லை வெல்லக்கூடிய மற்றோரு சொல் இல்லை என்பதை நன்றாக அறிந்த பின்பே அந்தச் சொல்லை யாவர்க்கும் சொல்ல வேண்டும்.

அந்த வகையில் சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் அவர்கள் தனது இதழில் வருடங்களைக் குறிப்பதற்கு நகை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

நகை இங்கு சிரிப்பு, இன்பம் எனப் பொருள்படுகிறது. அவ்வாறாக சிரித்திரன் நகை 32 என்பது 32 வருட வருகையைக் குறிக்கின்றது. அதே ஆசிரியரின் கடைசி இதழாகவும் இருக்கின்றது.

சிரித்திரன் ஆரம்ப காலத்தில் ஒரு நகைச்சுவை இதழாக உருப்பெற்றது. அதன் பின் பல இலக்கிய எழுத்தாளர்களின் தனித்துவமான நகைச்சுவை உணர்வைத் தரும் ஆக்கங்களையும் உள்ளடக்கி அதனை ஒரு இலக்கிய இதழாகவும் உருவாக்கியுள்ளது.

சிரித்திரன் நகை 33 இல் நகைக்கின்றது என்று சொல்லும் போது சொல்லில் ஒரு இன்பம். அதே போல நகை என்ற சொல்லுக்கு பல கருத்துக்கள் இடத்திற்கு ஏற்ப பொருள்படுகின்றன.



**லண்டன்வாசி:** மச்சான். நானும் நண்பர்களும் எமது ஊரில் தொழிற்சாலை ஆரம்பித்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கலாம் என இருக்கிறோம்.

**ஊர்வாசி:** ஹா... ஹா... ஹா...

நகை என்ற சொல்லை நாம் ஒருவரை பண்படுத்தவும், எதிர்மறையாக புண்படுத்தவும் பயன்படுத்தலாம். எமது நாளாந்த வாழ்வில் ஒருவர் கருத்தை அவமதிப்பதற்கும் நிராகரிப்பதற்கும் நாம் நகைக்கமுடியும். சில வேளைகளில் என்ன நக்கலா? என்போம். நக்கல் என்ற சொல்லை நகைக்கீடாக பயன்படுத்துவோம். நையாண்டி என்ற சொல்லும் இங்கு ஞாபகம் வருகின்றது.

நகை என்ற சொல் பெண்களுடன் தொடர்புடைய ஒரு சொல்லாக இருக்கின்றது. ஆபரணங்கள் அணிவதால் நகை என்ற சொல் பெயர்ச் சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் பயன்படுத்தப்படுகின்றது. "நகைமுகங்கோட்டி" நின்றாள். என்று கூறுவோம். பூவின் மலர்ச்சியை நகை எனக் கூறுவது போல் பெண்ணின் முக மலர்ச்சியையும் நகைத்தாள் என்போம்.

நகையரல், எள்ளிநகை, முரண்நகை, அதைவிட நகைக்கடை, நகைவட்டி, நகைநட்டு, நகைநாணயம், நகைப்பிற்கிடமான காரியம் போன்ற சொற்கள் எம்முடன் வாழ்பவை. நக, நகை என்ற சொற்களை நாம் குறள் அதிகாரம் புறங்கூறாமையில் குறள் 182.187 ஆகியனவற்றில் காணலாம்.

நகை என்ற சொல் இன்று சிரித்திரனின் தாரக மந்திரமாக நற்பயனளிக்கும் சொல்லாக மிளிர்கிறது.

சுரேஸ் கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பீற்றர் – ஏண்டா அவனைத் திருப்பி அனுப்பின?

ஜான்- 2021 கலண்டர் வேணுமாம். எங்களிட்ட வெறும் 20 கலண்டர் தானே இருக்கு.

# அதிக சிரிப்பு

மைக்கல் :– இலங்கையில் அகழான்கள் கூடிப்போச்சுதாம்.

நேசன்:- ஏன் அப்படி என்ன நடந்திட்டு?

மைக்கல் :– எங்கை பார்த்தாலும் அகழ்வாராய்ச்சி என்று கூறிக்கொண்டு கொஞ்சம் அகழான்கள் கிளம்பி இருக்கே தெரியாதா?



"இலங்கையில் ஆண்டு ஒன்றில் புதிய அனுமதி பெற வரும் மாணவர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டில் மிகக் குறைவாக உள்ளதாமே"

"கொரோணாவைக் காரணம் காட்டி பிள்ளைகள் எல்லாம் ஒன் லைனில் அல்லது போன் லைனில் படித்து போட்டுதுகள் போலை"





இலங்கையில் கறுவாவினால் தயாரிக்கப்பட்ட சிகரெட்டை அமைச்சர் புகைத்துக் காட்டி அறிமுகம் செய்திருக்கிறாரே...!

கொஞ்ச நாளில்...தேயிலையால் செய்த சுருட்டுக்கும் அறிமுக விழா நடந்தாலும் நடக்கும்.



"இந்த நாட்டில் எப்போது எல்லோரும் சுதந்திரமாக நடமாடும் காலம் வரப்போகிறதோ?"

"நாட்டில் பேரினவாத நோய் முற்றாக அழியும்போது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றாதே ஏமாறாதே

அந்த வலயக் கல்வி அலுவலகத்தில் கணக்குப் பகுதியில் சிற்றூழியனாகக் கடமை புரிபவன் சுந்தரம். தினசரி கணக்குப் பகுதியை துப்பரவு செய்வதுடன் கணக்காளர் சொல்லும் அனைத்து கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியது அவன் பொறுப்பாகும். வயது முப்பதாகிறது. இன்னும் திருமணமாகவில்லை. பொது நிறம். தலையில் இலேசாக வழுக்கை விழுந்திருந்தது.

அதிபர்களும் ஆசிரியர்களும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அந்த அலுவலகத்திற்கு வந்து போவார்கள். அன்றொரு நாள் ஓர் அழகிய ஆசிரியை தனது தேவையின் நிமித்தம் அங்கு வருகை தந்து தாபனப் பிரிவில் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தாள். தூரத்திலேயே அவ்வழகியைக் கண்டுவிட்ட சுந்தரத்திற்கு அவள்மீது இனம் புரியாத காதல் ஏற்பட்டது. அவளையே திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் பிறந்தது.

அவ்வாசிரியை சென்றபின் தாபனப்பிரிவில் அவளைப்பற்றிய தகவல்களைப் பெற்றான் சுந்தரம். அவள் ஒரு பட்டதாரி ஆசிரியை. நகரத்திலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள கிராமம் அவளின் வசிப்பிடம். சுந்தரத்தின் கிராமத்திற்கும் அவளின் கிராமத்திற்கும் இடையே சுமார் 80கிமீ தூரம். இதனால் ஒருவர் குடும்பத்தை மற்றவர் அறிய வாய்ப்பில்லை. அவர்கள் இருவரினதும் பதவியில் நீண்ட இடைவெளி. எட்டாக் கனிக்கு கொட்டாவி விடுகிறோமா என்று சிந்தித்த சுந்தரம் எப்படியும் அவளை அடைந்திட கங்கணம் கட்டினான்.

தனது சிநேகிதர்களுடன் ஆலோசனை நடாத்தி எடுத்த முடிவுதான் சகலகலாவல்லவன் கமல்ஹாசன் ஸ்ரைலில் திருமணம் செய்வது. போலித் தரகர் தயாரானார். பெண் வீட்டாரிடம் சம்பந்தம் பேசப்பட்டது. மாப்பிள்ளை கல்வி அலுவலகத்தில் கணக்காளர் பதவி வகிப்பவர் என்றும் அவரை விடுமுறை நாளொன்றில் அலுவலகத்தில் வந்து பார்க்கலாம் என்றும் பேசி முடித்தார் தரகர்.

அன்று சனிக்கிழமை கல்வி அலுவலகத்தில் ஓரிரண்டு பேர் ஓவர்டைம் செய்ய வந்திருந்தனர். கணக்குப்பகுதியில் சுந்தரம் மட்டுமே வந்திருந்தான். அன்றுதான் பெண்வீட்டார் மாப்பிள்ளையைப் பார்க்க வருகை தரும் நாள். சுந்தரம் ரிப்டொப்பாக கழுத்துப்பட்டியுடன் ஆடையணிந்து நண்பர்கள் சகிதம் காத்திருந்தான். தூரத்தில் பெண்வீட்டார் வருவதைக் கண்ட சுந்தரம் உடனே கணக்காளரின் சுழல் நாற்காலியில் அமர்ந்து ஒரு கையில் தொலைபேசி ரிசீவரை எடுத்து காதில் வைத்துக்கொண்டு ஏதோ தெரிந்த இங்கிலீசில் வெளுத்துக் கட்டினான். வந்தவர்களை மறு கையால் அமரும்படி செய்கை காட்டினான். பிறகு என்ன பெண்வீட்டார் கணக்காளர் மாப்பிள்ளையை விடுவார்களா? திருமணம் நடைபெற ஆயத்தம். அதில் அந்த




ஆசிரியர் : ஏன் றிப்போட்டில் உன் அப்பாவிடம் கையெழுத்து வாங்காமல் அம்மாவிடம் வாங்கிக் கொண்டு வந்தாய்?

மாணவன்: குடும்பத் தலைவனின் கையெழுத்துத் தானே போடச் சொன்னீங்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆசிரியை கற்பிக்கும் பாடசாலை அதிபரும் கலந்து கொண்டார். அந்த அதிபருக்கு கல்வி அலுவலக சந்துபொந்தெல்லாம் நன்றாகத் தெரியும். அங்குவேலை செய்யும் எல்லோரையும் தெரிந்து வைத்திருந்தார். வந்திறங்கிய மாப்பிள்ளையைக் கண்டதும் அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. இதில் ஏதோ தவறு நடந்திருக்கும் என்று எண்ணி பெண்ணின் தந்தையிடம் விசாரித்தபோது மாப்பிள்ளையின் குட்டு வெளிப்பட்டது. நல்லவேளை திருமணம் முடியவில்லை.

கெட்டிமேளம் முழங்கவில்லை. கட்டி வைத்தனர் மாப்பிள்ளையை. நாதஸ்வர ஓசை கேட்பதற்குப் பதிலாக மாப்பிள்ளைக்கு சாத்திய சாத்தில் அவரின் அழுகுரல் சப்தமே ஒலித்தது. பெண் வீட்டார் கணக்காளர் என்று கணக்குவிட்ட மாப்பிள்ளையை நன்றாகக் கவனித்து பொலிஸில் ஒப்படைத்தனர். பதவியை இழந்த சுந்தரம் இன்னும் சிறை வாசம் அனுபவிக்கிறான். இப்போது அவனின் எஞ்சிய தலைமுடி அனைத்தும் உதிர்ந்து பூரண வழுக்கையாகி விட்டது. சகல கலாவல்லவன் வேடம் தரித்தவன் சகலகலா வழுக்கையனாக மாறிவிட்டார். ஏமாற்ற நினைத்தவர் இறுதியில் அவரே ஏமாந்து விட்டார் ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவைத் துணுக்குப் போட்டி-02



பெயர் ___________________________

முகவரி ___________________________

தொலைபேசி இலக்கம் ___________________________

நகைச்சுவைத்துணுக்கு ___________________________

___________________________


___________________________

___________________________

ஒவ்வொரு மாதமும் ஒரு ஓவியம் சிரித்திரனில் பிரசுரமாகும். அதற்குப் பொருத்தமான நகைச்சுவை துணுக்கு ஒன்றினை **editor @Siriththiran.com** எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் அல்லது சிரித்திரன் ஆசிரியர், 65, வேலப்பர் ஒழுங்கை. ஸ்ரான்லி கல்லூரி முன்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபாலின் மூலமாகவும் படத்திற்குப் பொருத்தமான துணுக்கினை அனுப்பிவையுங்கள்.

- அனுப்பப்படும் துணுக்குகள் அடுத்த மாதம் பதினைந்தாம் திகதிக்கு (15.05.2021) முன் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.
- ஆக்கம் உங்கள் சொந்தப் படைப்பாக இருத்தல் அவசியம்.
- துணுக்குகள் இரு வரிகளுக்குள் உட்பட்டதாக இருக்கவேண்டும்.
- போட்டியில் பங்குபற்றி வெற்றியடையும் நகைச்சுவைத் துணுக்காளர்கள் சிரித்திரனின் வருடாந்த பரிசுப்போட்டியில் பரிசுபெறுவர்.

## நகைச்சுவைத் துணுக்குப் போட்டி-01



**கடந்த மாத துணுக்குப்போட்டி-01 இல் தெரிவான மூன்று துணுக்குகள். வெற்றியாளர் அடுத்த இதழில்...**

- கொரோணாவுக்குப் பயந்த ஆபிசரும்
  குப்பை கொட்டப்பயந்த அயலவரும்
  **தனுஷன் இராமச்சந்திரன்**
  **வட்டக்கச்சி**

- பயப்படாதே தோழா
  துணிந்து கொட்டு குப்பையை
  **குகநாதன் லவண்**
  **கிளிநொச்சி**

- இவர் யார் காரில?
  காரில போற குப்பையன்
  **காயத்திரி பிரேமநாத்**
  **யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தியடிச் சமாச்சாரம்

மணியம் - என்னப்பா உன்னை நேற்று நல்லூரடில கண்டன் கண்டுட்டு தெரியாத மாதிரிப் நிக்கிறாய் நீ இப்ப பெரியாளா மாறிட்டா என்ன?

காராளி - என்னடா மணியம் நீயும் வந்தனியா? நான் சத்தியமா உன்னைக் காணேல்லை கண்டிருந்தா கதைச்சிருப்பன் தானே.

மணியம் - அதில ஒரு ஏழெட்டுப் பேர் மயிந்திக்கொண்டு நிண்டவை அதிலை நீயும் ஒராள் எண்டு எனக்குத் தெரியும். நீ கொஞ்சம் காசு கிடைக்கும் எண்டிட்டு வாய் பாத்துக்கொண்டு நிண்டனி அது சரி எப்ப உந்த வேலைக்கு வெளிக்கிட்டனி?

காராளி – இல்லையடாப்பா தெரியாதை என்ரை சிநேகத்தின்ர பெட்டைக்கு லண்டனில மாப்பிளை பாத்தது இப்ப உந்த கொரோணாவால மப்பிளை இரண்டு வருசமா வரமாட்டாமல் இருக்கிறார். அதான் ஊருக்க உள்ள பெடியனுக்கு செய்து வைப்பமெண்டு பொம்பிழை காட்ட வந்தனாங்கள்.

மணியம் - ஓ அப்படி போகுதே கதை அப்ப நீயும் இப்ப புறோக்கர் வேலை பாக்க வெளிக்கிட்டாய் உனக்கும் ஏதும் கிடைக்குமென்ன?

காராளி – தல்லாம் எண்டு தான் மற்ற புறோக்கர் சொல்லி இருக்கிறார். நான் தான் பெடியனை விசாரிச்சு சொன்னனான். உண்மையில பெடியன் குடி வெறி இல்லாத நல்ல தங்கமான பெடியன் முப்பத்தைஞ்சு வயது மட்டும் இருந்திட்டான் அதான் இவளுக்கு செய்து வைப்பமெண்டு பொம்பழையை நல்லூரிலை வைச்சு காட்டினனாங்கள் அதையும் நீ கண்டிட்டாய்.

மணியம் - நல்லா இருக்கடா உன்ரை கதை நீ உன்ரை பெடியனுக்கு இரண்டில செவ்வாய் எண்டு சொல்லிக் கொண்டு எனக்குத் தெரிஞ்சு பத்து வருசத்துக்கு மேல அவனுக்கு வாற சம்மந்தம் எல்லாத்தையும் தட்டிக்கழிச்சு விட்டனி. இப்ப என்னடா என்டா உந்தப் பெடியனுக்கு முப்பத்தைஞ்சு வயசாப் போச்சு எண்டு அவசரப்படுறா அப்ப என்ரை பெடியன்ரை வாழ்க்கை உனக்கு பெரிசா தெரியேல்லை அப்பிடித்தானே.

காராளி - இல்லையடாப்பா அவனுக்கு இரண்டில செவ்வாய் சரியான குற்றமுள்ள சாதகம் பாவக்கிரகமும் கூட கிடக்கிது. அதனால அவனை பாவக்கிரகம் கூடின பெட்டைக்கு தான்ரா செய்து வைக்கோணும் உனக்கு என்ன தெரியும் இதுகளைப்பற்றி. நீ ஆரும் சொல்லுற கதையளைக் கேட்டு கதையாதை இந்த விசயங்களை வடிவா தெரிஞ்சு வைச்சுக்கொள்.

மணியம் - நீ என்னடா ஜோதிடம் தெரிஞ்ச மாதிரிக் கதைக்கிறா உனக்கு தெரியுமே வடிவா எங்கை செவ்வாய் நிண்டா குற்றம் வருமெண்டு. இதெல்லாம் நீயும் உன்னோட சேர்ந்து புறோக்கர் தொழில் செய்யிறவையும் தங்கட வருமானங்களுக்காக சொல்லுற கதை. நல்லொரு சாத்திரியைப் பாத்து பெடியனுக்கு வேளைக்கு கலியானம் செய்து வைக்கப்பார். உன்ரை குடிச்சிலவுக்கு சம்மந்தம் பேசாதை.

இதெல்லாம் நீயும் உன்னோட சேர்ந்து புறோக்கர் தொழில் செய்யிறவையும் தங்கட வருமானங்களுக்காக சொல்லுற கதை.

காராளி – நீ சொல்றதைப் பாத்தா ஏதோ நல்ல விசயமாத் தான் கிடக்கு ஆனா எனக்குத்தான் ஒண்டும் விளங்கேல்லை. சரி ஒருக்கா நேரத்துக்கு பாத்து அவனுக்கு கலியாணத்தை செய்து வைக்கப் பாக்கிறன். எங்கையும் நல்ல பொம்பிழைப்பிள்ளையாப் பாத்துச் சொல்லடா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மை ஒரு வரப்பிரசாதம்

**நேர்மை கூட ஒரு போதை தான், அதை அனுபவித்து விட்டால், அதற்கு அடிமையாகி அதிலிருந்து மீண்டு வர முடியாது**

ஒரு வியாபாரி பயணம் செய்வதற்காக ஒட்டகம் ஒன்றை வாங்குவதற்குச் சந்தைக்குப் போனான். ஒட்டக வியாபாரியிடம் அப்படி இப்படி என பேரம் பேசி நல்ல விலைக்கு ஒட்டகத்தை வாங்கிக் கொண்டு ஓட்டி வந்தான். ஒட்டகம் வாங்கிய வியாபாரிக்கோ மகிழ்ச்சி. நியாயமான விலையில் நல்ல தரமான ஒட்டகம் கிடைத்தது என்று.

அதற்கு முன்பாக ஒட்டகத்தின் மேலிருந்த சேணத்தை அவிழ்க்க முயற்சித்தான். அவனால் முடியவில்லை. தன் வேலையாளை அழைத்து ஒட்டகத்தின் சேணத்தை அவிழ்க்கச் சொன்னான்.



ஒட்டகத்தின் மீதிருந்த சேணத்தை அவிழ்த்த வேலையாள், பொத் என ஏதோ கீழே விழுவதை கண்டு எடுத்துப் பார்த்தான்.

அது ஒரு சிறிய பொக்கிஷப்பை. உள்ளே பிரித்தான், ஆச்சரியத்தால் அவன் கண்கள் விரிந்தன. அதனுள்ளே விலை மதிப்பற்ற நவரத்தினக் கற்கள். தகதகவென மின்னியது. அதை எடுத்து கொண்டு முதலாளியிடம் ஓடி வந்து அதைக் காண்பித்தான். உடனே வியாபாரி, "அந்த பையை இப்படி கொடு, உடனே அந்த ஒட்டக வியாபாரியிடம் கொடுக்கணும்"னு சொல்லி புறப்பட்டான்.

பணியாளோ, "ஐயா இதுயாருக்கும்தெரியப்போவதில்லை. இது இறைவனின் பரிசு. நாமே வைத்து கொண்டால் என்ன? தாங்கள் அதிகமாக வைத்துக் கொண்டு எனக்கு கொஞ்சமாகக் கொடுங்கள்" என மிகவும் வற்புறுத்தினான். வியாபாரியோ ஒத்துக்கொள்ளாமல் ஒட்டக வியாபாரியைப்பார்த்து நவரத்தினங்களை ஒப்படைக்கப் புறப்பட்டான்.

ஒட்டக வியாபாரியிடம் சேணத்தை அவிழ்த்த போது கிடைத்த பொக்கிஷப் பையைக் கொடுத்ததும் நன்றி யோடு வாங்கிக் கொண்டான். பின்பு அந்த பொக்கிஷப் பையை வியாபாரியிடம் கொடுத்து, "உங்கள் நேர்மையை நான் பெரிதும் மெச்சுகிறேன். தங்களுக்கு ஏதாவது பரிசளிக்க விரும்புகிறேன். இதிலிருந்து உங்களுக்குப் பிடித்தமான கற்கள் சிலவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று நீட்டினான். அதற்கு அந்த வியாபாரியோ சிரித்துக் கொண்டே "உங்களிடம் இந்த பொக்கிஷத்தை தரும் முன்பே இரண்டு விலையுயர்ந்த இரத்தினங்களை நான் எடுத்து வைத்துக் கொண்டேன்" என்றான். உடனே ஒட்டக வியாபாரியோ கற்களை எண்ணிப் பார்க்க எதுவுமே குறையவில்லை. சரியாக இருந்ததைக் கண்டு குழம்பினான். உடனே அந்த வியாபாரி நான் சொன்ன இரண்டு இரத்தினங்கள் ஒன்று எனது நேர்மை இரண்டாவது எனது சுயமரியாதை என்றான் கம்பீரமாக சிறிது கர்வமாகக் கூட கூறினான். நேர்மையாளனாக வாழ்வது பெரிய விஷயமல்ல. தவறு செய்யக்கூடிய சந்தர்ப்பமும், வாய்ப்பும், வாய்த்தாலும் நேர்மையாக வாழ வேண்டும். வாழ்வில் ஒரு நாள் நேர்மையையாய் வாழ்ந்து பார்த்தால் அதன் ருசி உணர்ந்து விட்டால், நாம் எதற் காகவும் நேர்மையை இழக்க மாட்டோம். நேர்மை கூட ஒரு போதை தான், அதை அனுபவித்து விட்டால், அதற்கு அடிமையாகி அதிலிருந்து மீண்டு வர முடியாது - ஆனால் மன நிம்மதி கிடைக்கும்...

அரும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசையும் ஆசையும்

வேதநாயகம் தபேந்திரன்


"மீசை வச்ச ஆம்பிளைக்கு டிமாண்டு டிமாண்டு
பொண்ணைப் பெத்த அப்பனுக்கு நிமாண்டு நிமாண்டு"
இது இடைக் காலத்தில் வந்த சினிமாப்பாடல்.

ஆனால் எமது மண்ணில் புலம்பெயர் வாழ்க்கை வந்த போது ஐந்து அழகான பெண் பிள்ளைகளைப் பெற்ற தகப்பன் லண்டன், சுவிஸ், கனடா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் என்று அனுப்பி மிக மிக வசதியாக வாழ்ந்ததுமுண்டு.

ஆனால் மீசையுள்ள ஆம்பிளைக்குரிய டிமாண்ட் தமிழர்களிடம் எல்லாக் காலத்திலும் உள்ளது. அது மாறவில்லை. மீசை, தமிழனுக்குரிய ஆளுமை அடையாளமாகப் பரம்பரை பரம்பரையாகப் பார்க்கப்பட்டு வருகிறது. மீசை இல்லாமல் கிளீன்சேவ் எடுத்துள்ளவரைப் பார்த்து " என்ன முட்டுக் காய்க்கு மூள் எடுத்தது மாதிரியிருக்கு" எனப்பகிடி பண்ணுவோரும் உள்ளனர். இது பழைய தலைமுறையின் பகிடிக் கதையாகிப் போய் விட்டது.

பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவர்கள் றாக்கிங் காலம் வரும். அப்போது மீசையை மழித்து யூனியேர்ஸ் எனச் சீனியேர்சுக்குக் காட்டும் வழக்கம் காலாதி காலமாகவே எமது பல்கலைக்கழகங்களில் தொடர்கிறது.

1980 களில் ரஜனிகாந்த் நடித்த தில்லுமுல்லு என்ற படம் 1980 களின் முற்பகுதியில் பிரபலமானது. இந்தப் படத்தின் நாயகி மாதவியைக் காதல் செய்வதற்காக ஆசிரியர் வேசத்தில் ரஜனிகாந்த் அவரது வீட்டிற்குச் செல்வார். அவரது தந்தையாக வரும் நடிகர் தேங்காய்ச் சீனிவாசனை ஏமாற்ற ரஜனிகாந்த் மீசை வைத்தவர் இந்திரன். மீசை வைக்காதவர் சந்திரன் என ஏமாற்றுவது பிரபலமான நகைச்சுவை.





படத்துக்குப் படம் வித்தியாசமான மீசை வைத்து நடித்த சிவாஜி கணேசனின் மீசையும் மாறுபட்டது. நடிகர் நெப்போலியனின் மீசை தனித்துவமானது. அது போல நடிகர் தனுசின் சின்னக் கீற்று மீசையும் பிரபலமானது.

மூக்கின் மையப் பகுதிக்குக் கீழே மீசை வைப்பது ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லரின் வழக்கம். அவரால் அந்த ஸ்ரைலில் விடும் மீசை ஹிட்லர் மீசையெனப் பிரபலமானது. ஹிட்லரின் உமாநாத் எனும் படம் வந்தது. அதில் நடிகர் சிவாஜி க ணேசன் ஹிட்லரின் மீசை போல வைத்துக் கொண்டு உமாநாத் எனும் பெயரில் வருவார்.

வீரபாண்டிய கட்டப் பொம்மனில் சிவாஜி வைக்கும்மீசை ஒருவகைப் பிரபலம் வெள்ளைத்துரையுடன் கதைக்கும் போது " துடிக்கிறது மீசை அடக்கு அடக்கு உன் நாவை" எனும் வீர வசனம் இன்றளவும் பிரபலமானது. கலைஞர் கருணாநிதியின் எழுத்துருவாக்க வசனங்களே அவை. எட்டையபுரத்துச் சுப்பிரமணிய பாரதியாரின் மீசை ஒரு ஸ்ரைல். முண்டாசு கட்டிய மீசைக்காரக் கவிஞன் எனப் பாரதியாரைக் குறித்துக் கதைப்பார்கள்.

மருத்துவத் தொழிலில் ஈடுபடும் டொக்ரர்மாரில் பெரும்பான்மையானோர் வழமையாக மீசை வைப்பதில்லை. இது பிரித்தானிய வழி வந்த பாரம்பரியமாக உள்ளது. எமது தமிழ் டொக்ரர்களில் பெரும் பகுதியினர் மீசை வைக்காமல் கிளீன் சேவ் கோலத்தில் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிற்கின்றனர். இதற்குரிய காரணத்தை அவர்கள் தான் கூற வேண்டும்.

சிலர் வைக்கும் மீசைகள் தனித்துவமாக உள்ள காரணத்தால் மீசை இராசன், மீசைக் கிருஸ்ணர் போன்ற பட்டப் பெயர்களுடன் ஊரில் அடையாளப்படுத்தப் படுவார்கள். இந்தியன் படத்தில் வரும் தாத்தா கமலஹாசன் மீசை வைக்காமல் கிளீன் சேவ் தாத்தாவாகவே படம் முழுவதும் வருவார். தனது மகன் கமலஹாசனை இலஞ்சம் வாங்கியதற்காகக் கொல்வதற்கு அலைவார். அப்போது ஒரு கட்டத்தில் மகன் குழந்தையாக இருக்கும் போது மீசை குத்தி அழுததால் அதனைத் தான் எடுத்ததாகக் கூறும் போது உணர்வு பூர்வாக இருக்கும்.

ஆண்மைத் தன்மை உள்ள ஹோர்மோன்கள் கூடுதலாக இருப்பதால் பெண்கள் சில பேருக்கு மீசை முளைக்கிறது என்கிறார்கள். எமது நாட்டில் போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரனின் கிளீன் சேவ் எடுத்த படம் வந்தால் தலைவர் சமாதானத்திற்கு சாதகமாக சிக்னல் காட்டிவிட்டார் என்பார்கள்.


அது போலப் பேச்சுவார்த்தை நடக்கும் காலத்தில் மீசையுடன் உள்ள படம் வந்தால் தலைவர் போருக்கு ஆயத்தமாகி விட்டாரென ஆய்வாளர்கள் எழுதியுள்ள தனைக் கண்டுள்ளேன்.

வே.பிரபாகரனின் 1980 களின் மீசை பிரபல மானது. அது அவருக்குத் தனித்துவமான அழகைக் கொடுத்தது. போராளி இயக்கத் தலைவர்கள் எல்லாம் மீசைவைத்துள்ளனர். இந்தியப் பாரம்பரியத்தில் மீசை வீரத்தின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. இதனால் 18 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியப் படைகளில் இந்தியர்கள் சேர்க்கப்பட்ட போது மீசை,தாடி இல்லாத



பிரித்தானியத் தளபதிகளைப் பொதுமக்கள் வீரர்களாகப் பார்க்க மாட்டார்கள் என இந்திய வீரர்கள் கூறினார்கள்.

இதனை ஏற்று பிரித்தானிய அரசாங்கம் தமது வெள்ளையினத் தளபதிகளை மீசை, தாடி வைக்குமாறு பணித்தது. இதனால் மீசை, தாடி வைக்கும் பழக்கம் பிரித்தானியா வரை பரவியதுமீசை, தாடிவீரத்தின் அடையாளமாகப் பார்க்கப்பட்டதால் அப்படிப்பட்ட ஆண்களையே இந்தியப் பாரம்பரிய வழிவந்த பெண்கள் விரும்புவது வழக்கம். ஆனால் வெள்ளைக்காரப் பரம்பரையினர் மீசை



வைக்காமல் கிளீன் சேவ் எடுப்பதே அதிகம். மீசைக்கு ஆங்கிலத்தில் *Moustache* எனும் சொல் பாவனையில் உள்ளது. இது பிரெஞ்சு மொழிச் சொல்லாகும். 14 ஆம் நூற்றாண்டில் இத்தாலிய மொழியிலிருந்தே இச் சொல் பிரெஞ்சு மொழிக்கு வந்துள்ளதாக மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆகவே மீசையை விரும்பும் மேற்கத் தையர்களும் உள்ளனர் என்பதே உண்மை.

இருபதாம் நூற்றாண்டில் அரபு நாடுகளில் மீசைகள் அதிகாரத்துடன் தொடர்புடையதாகக் கருதப்பட்டன. இஸ்லாமில் மீசையை ஒழுங்கமைப்பது சுன்னத் என்று கருதப்படுகிறது. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை. குப்புற விழுந்தாலும் மீசையில் மண் முட்டேல்லை. மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லை. என மீசை தொடர்பான பழமொழிகள் உள்ளன.

இது போல வேறும் பழமொழிகள் இருக்கலாம். இலங்கையில் ஆட்சித் தலைவர்களாக இருந்தவர்களில் மகிந்த ராஜபக்ச, கோட்டபாய ராஜபக்ச ஆகியோர் மட்டும் தான் மீசை வைத்த தலைவர்களாக அறியப்பட்டுள்ளனர்.

மீசை தொடர்பாக நினைவலைகள் பலரிடம் இருக்கும். வாசித்ததை அசை போட்டுப் பாருங்கள். இன்னமும் நினைவுகள் கிளர்ந்தெழும். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Pulamai Media**
PRODUCTIONS

JAFFNA

**Video Editing | 2D, 3D Animations | Graphic Designing**
**Wedding Videos | White Board Animation | Advertisements**
**Content Writing | Social Media Managements**
**Vocal artists | 3D Architechural Visualization**
**Colour Correction & Grading | VFX**

CONTACT US +94 741 238 937

info@pulamaimedia.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயணச் சுவைகள்

சுரேஸ் துரை கணபதிப்பிள்ளை - பிரான்ஸ், புத்தூர்

அதிகாலையில் எழுந்து புழுதியும் கற்களும் நிறைந்த தெருவில் இறங்கி பொலிவியாவின் வாலே கிரான்ட் சிறு நகரில் இருந்து சே குவேராவை கைது செய்யப்பட்ட இடத்தை பார்ப்பதற்கு புறப்பட்டோம். வீதி மிகவும் மோசமாக இருந்தது. நாங்கள் திணறி திணறி நடந்தோம். மலிவு விலையில் புதிதாக வாங்கிக் கொண்ட சப்பாத்து ஏறக்குறைய பிரிய தொடங்கிவிட்டது.

பொலிவியா நாட்டில் மலைகளில் அமைந்துள்ள சிறு நகரங்களில் பொதுவாகவே தெரு விளக்குகள் இருப்பதில்லை. இந்த இடத்திலும் இதே நிலைதான். அதிகாலையில் சில இடங்களில் மட்டும் மங்கலான ஒரேஞ் நிற வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டு இருந்தது.

அடி வாரமே தெரியாத அதளபாதாளத்தின் விளிம்பில் ஒரு பக்க சக்கரங்கள் நீட்டிக் கொண்டு இருக்க வாகனம் சென்ற காட்சி உயிரோடு வீடு போய் சேருவேனா என்ற பீதியை உருவாக்கியது. தேவை ஏற்படும் பட்சத்தில் வாகனத்தை விட்டு வெளியே பாய்வதற்கு தயாராகி நானும் மதனாவும் ஆளுக்கொரு மூலையில் நிலையெடுத்து பதுங்கி இருந்தோம்.

ஆனால் எங்களது வாகன ஓட்டுநர் மட்டும் அசையாமல் சிரித்துக் கொண்டே இருந்தார். எங்களுக்குள் பொதுவான மொழி எதுவும் இல்லை. இந்த மலைத் தொடரின் இரு பக்கமும் உள்ள பள்ளத்தாக்கில் ஏராளமான சிலுவைகள் இருந்தன. அவர்கள் அனைவரும் இந்த பாதையில் சென்று விபத்துக்குள்ளாகி கொல்லப்பட்ட அதிஷ்டமில்லாத பயணிகள்.

நான்கு கிலோ மீட்டர் நடப்பதற்கு ஒரு மணிக்கு மேலாகிறது. மரங்கள் அடர்ந்த மலைகளால் காடுகளால் சூழப்பட்ட இந்த பச்சை நிற ஏரியை கடந்து வீதிக்கு ஏறினோம் .

எங்களுடன் சேர்ந்து வந்து சேர்ந்த பூச்சிகள் எங்களை வட்டமிட்டது. வாய்ப்பு கிடைத்த நேரத்தில் அவைகள் கடிக்க மறக்கவில்லை. வெளியை மறைக்கும் முகமாக எந்த திசையில் பார்த்தாலும் உயர்ந்த சிகரங்கள்.

சிறிதளவு தூரத்தில் நிலச்சரிவு ஏற்பட்ட இடத்தை பார்த்தோம். இந்த இடம் ஒருவிதமான மலை யிடுக்கு போல இருந்தது. செங்குத்தான பாறைகளுக்கும் கூர் முகடுகளுக்கும் இடையில் ஆறு ஓடிக்கொண்டு இருந்தது. அது பெரிய மரங்களை தாங்கி இருந்த மண்ணை அரித்து, எப்போதும் விழும் என்ற நிலையில் அந்த மரங்களின் வேர்கள் காற்றில் தொங்கிக் கொண்டு இருந்தன.

பசி மெதுவாக தொடங்கினாலும் ஆர்வம் குறையாமல் குறுக்கே கிடந்த மரங்களைத் தாண்டியபடி சென்றோம்.

லா கிகேரா கிராமத்தில் இருந்து யூரோ கணவாய்க்கு நடந்து சென்றோம். சடுதியாக இறங்கும் மலைகளில் ஒரு தடியின் உதவியுடன் சென்றோம். எங்கிருந்தோ வந்த நாய் ஒன்று என்னுடன் ஒட்டிக் கொண்டு இருந்தது. மீண்டும் மலை உச்சியை அடைந்தவுடன் நாயை துரத்திக் விட்டு வாகனத்தில் ஏறி அடிவாரத்தை நோக்கி வந்தோம்.

மூன்று கிலோமீட்டர் தூரம் கழித்து மீண்டும் அதே நாயைக் கண்டேன். எங்களுக்கு பின்னால் அது ஓடி வந்து கொண்டிருக்கிறது.


வாலேகிரான்டில் இருந்து லா கிகேரா கிராமத்திற்கு பயணம் செய்ய மூன்று மணி நேரமாகிறது. ஆனால் இடைப்பட்ட தூரம் 60 கிலோ மீட்டர் தான். பல இடங்களில் மலைகளில் இருந்து கற்கள் விழுந்து பாதையை மறித்தது. தவிர தொடர்ந்து மழை. நாங்கள் சென்ற வாகனத்திற்கு மழைநீரை கண்ணாடியில் வழிக்கும் வசதிகள் இல்லை.
அவ்வளவு ஏன்?

இந்த கிராமத்தில் உள்ள எந்த வாகனத்துக்குமே இலக்க தகடு இல்லை என்பது தான் ஆச்சரியமாக இருந்தது.

தொடரும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம் மாதத்திற்கான குறுக்கெழுத்து
## இல.02 இன் கேள்விகள்



**இடமிருந்து வலம்**

1. எந்தப் பக்கம் இருந்து பார்த்தாலும் தெரிவது தெனாலிராமன் தான்!
3. செலவெல்லாம் போக எஞ்சியது இது தான்.
6. இலங்கை நகரத்து இசைக்கருவி.
9. தேவதத்தன் தொடுத்தது, சித்தார்த்தன் எடுத்தது.
10. நம் மொழியின் இலக்கணம் கூறும் பழம்பெரும் நூல்.
11. காலின்றி நடப்பன் இரையாகிப் பறப்பன.
12. தென்னையை முதலில் செதுக்கிய நகரம்.
15. எஃகை வார்த்து சிலிகான் சேர்த்து... ஏழாம் அறிவை எழுப்ப முயல்பவன்.
16 . முழங்காலின் எதிர்கட்சி தலைவர்?
17. திருக்குறளின் கம்பீரம்!

**மேலிருந்து கீழ்**

1. இவரும் ஓட்டுனர் தான்!
2. காதலித்தால் வரும் என்கிறார்கள்.
4. அமுது, நிலவு, உயிர்...
5. தீ மூட்டிய ஆபரணம்?
6. கணியன் பூங்குன்றனார் சொன்னது
7. பேருந்தில் சென்ற மாமல்லன்
8. தனம் தரும், கல்வி தரும்... நாயகியின் துதிப் பாடல்
9. பாவகை - ஔவை விநாயகருக்குப் பாடியது
12. பழந்தமிழின் புதிய பெயர்!
13. எரிக்கும் உறவு?
14. இதைத் தாண்டி ஒன்றும் இல்லை!

**கடந்த வாரம் குறுக்கெழுத்து இல.01 இன் விடைகள்**

இல 01. குறுக்கெழுத்திற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.தைப்பொங்கல் 4.சோதி 6. யந்திரம் 8. உவகை 10. தவலை 11. சாதா 13. கம்பர் 16. சபலம் 17.நம்ரவா(வானரம்) 19.குறைபாடு

**மேலிருந்து கீழ்**

1.தைரியம் 2.பொறுதி 3.கரம் 5.திருகை 6.ரதி 7.உவமானம் 9.வலை 10.தரை 11.சாகசம் 12. தாம்பரம் 14. பலவான் 15.மலைநாடு 18.வகு



**ரசிகன் :** என்ன பாகவதரே தற்போதைய மெல்லிசைப் பாடல்கள் எவ்வாறு இருக்கின்றன?

**பாகவதர் :** என்ன? அவை... இசைக்கிறதா? வல்லிசையாக வதைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்திச் சோடி

### பசு இயக்கம்

இலங்கையில் இறைச்சிக்காக மாடறுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது

(அமைச்சர்)

தென்னாசியாவில் மிகப்பெரிய இறைச்சி உற்பத்தி மற்றும் பதனிடும் தொழிற்சாலை கட்டுநாயக்கா முதலீட்டு வலயத்தில் அமைச்சரால் திறந்து வைப்பு

(செய்தி)

### டொலர் கையிருப்பு

கருவாட்டு மொத்த வியாபாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அதிக வரியுடன் கருவாட்டு இறக்கு மதிக்கு சென்ற வாரம் அனுமதி

(சுங்கம்)

இந்த வாரம் வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஒரு அமெரிக்க டொலர் இருநூற்றொரு ரூபாவை கடந்தது.

(மத்தியவங்கி)

### சந்தர்ப்பவாத அரசியல்

இலங்கையில் தமிழர்கள் சுய நிர்ணய உரிமையுடன் வாழ பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்

(இந்தி தூதுவர் வலியுறுத்தல்)

தமிழகத்தின் சட்டமன்ற தேர்தலில் மத்தியின் ஆளும் கட்சி மாநில கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிடுகின்றது.

(இந்திய செய்தி)

### இலங்கை அபிவிருத்தி

அப்போது:- தெற்காசியாவில் மிகவும் பின்தங்கிய நாடாகவும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள நாடாகவும் பங்களாதேஸ் இருக்கின்றது.

இப்போது :- இலங்கை கடன் நெருக்கடியை தீர்க்க இலங்கை பிரதமர் பங்களாதேஸ் பிரதமரிடம் கடன் தர கோரிக்கை

### கடன் (ஆப்பு)

இலங்கை தனது கடனை மீள செலுத்த அவதி சீனாவிடம் 1.5 மில்லியன் டொலர் கடனாக வழங்க கோரிக்கை -

(செய்தி)

சீனா கடனுதவியை தனது பணமான யுவானை வழங்கப் போவதாக செய்தி.

(சீன செய்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடொக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 9 | 5 | | | 3 | | 4 |
| | | 3 | | | | | | |
| | | | | | 3 | | 5 | |
| 9 | 7 | | 2 | | | | 4 | |
| | 8 | 1 | 4 | | 6 | 7 | 3 | |
| | 6 | | | | 8 | | 1 | 9 |
| | 1 | | 8 | | | | | |
| | | | | | | 4 | | |
| 5 | | 7 | | | 4 | 6 | | 8 |

9×9 கட்டங்கள் இணைந்து உருவாகிய இந்த சுடோக்குவில் சில எண்கள் மட்டும் தரப்பட்டிருக்கும். தர்க்க ரீதியாக சிந்தித்து வகைப்படுத்தி பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. கட்டங்களை 1 இல் இருந்து 9 வரையிலான எண்களை கொண்டு சரியாக நிரப்புவதே உங்களுக்கு தரப்பட்டுள்ள சவால்.

**பத்தி**

ஒவ்வொரு பத்தியும் 1.2.3.4.5.6.7.8.9 எண்களால் நிரப்பப்படவேண்டும். ஒரு எண் ஒரு தடவைக்கு மேல் இடம்பெறக்கூடாது.

**வரிசை**


ஒவ்வொரு வரிசையும் 1.2.3.4.5.6.7.8.9 எண்களால் நிரப்பப்படவேண்டும். ஒரு வரிசையில் ஒரு எண் ஒரு தடவைக்கு மேல் இடம்பெறக்கூடாது.

**பகுதி**

3×3 கட்டங்கள் இணைந்து ஒரு பகுதியாக இடம் பெற்றுள்ளன. 9 பகுதிகளும் 1.2.3.4.5.6.7.8.9 வரையுள்ள எண்களில் ஒரு எண் ஒரு தடவைக்கு மேல் இடம்பெறக்கூடாது.

**அவதானத்திற்கு**

சுடோக்கு புதிரிலுள்ள இலக்கங்களை உங்களால் மாற்ற முடியாது ஒரு Sudoku புதிரிற்கு ஒரு விடையே உண்டு.



**ஆசிரியர்:** டேய் என்னுடைய தலையில் குட்டினது யாரடா?


**மாணவன்:** சார். நீங்க தானே சொன்னீங்க வகுப்பில் யாராவது தூங்கினால் குட்டும்படி.



**வேலர்** : உன் குடிகார மருமகனுக்கு என்ன புத்தி சொன்னாலும் ஏறுதில்லையே

**மயிலர்** : ஓமோம் கெடு குடி சொற்கேளாது என்று உனக்கு தெரியாது போல?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாத்திரைக் கதை



## மானம்

தோட்டத்தின் ஒரு புறத்ததே புற்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. வருவோர் போவோரெல்லாம் புற்களை மிதித்து நடந்தார்கள். புற்கள் மிதிபட்டு அழுந்தி வாழ்ந்தன. புற்கள் மத்தியில் நெருஞ்சிப்புல் ஒன்று தோன்றியது. மிதிக்க வந்தவர்களின் கால்களைத் தனது முள்ளால் குத்தி அவர்களோடு போராடியது நெருஞ்சிப்புல். நெருஞ்சிப் புல்லின் முள்ளிடம் குத்து வாங்கியவர்களெல்லாம் காலை இழுத்துக் கொண்டு வேதனையோடு ஓடினார்கள்.

நெருங்சிப் புல்லை நினைக்க சாதாரண புல்லுக்குப் பயமாக இருந்தது. அது நெருங்சிப் புல்லைப் பார்த்து " உனக்கு பைத்தியமா? அவர்களுக்கு கோபம் வந்து உன்னைப் பிடுங்கி எறிந்தால் நீ அநியாயமாகச் செத்துப் போவாயே!" என்று பதட்டத்தோடு கூறியது.

நெருஞ்சிப் புல்லோ அலட்சியமாகச் சிரித்தது. பின்பு அது நெஞ்சை நிமிர்த்திச் சொல்லிற்று. "வாழ்வதானால் மிதிபடாமல் வாழ வேண்டும். இல்லையானால் செத்துப் போக வேண்டும்."

காசியானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவும் உறவும்





# குரக்கன் புட்டு

எங்கட பேரம்பலம் மாமா லண்டனில இருந்து வாறார். அவருக்கு நல்ல ருசியான சாப்பாடு செய்து குடுக்கோணும். ரவுணில இருக்கிற சாப்பாட்டுக்கடை ஒண்டுக்கு போவம். அங்க போனால் தான் சாப்பாடுகள் விதவிதமா இருக்கும் நாங்களும் சாப்பிடலாம். அவரும் நல்லா சாப்பிடுவார்.

மாமா வந்திட்டார். மாமா எப்படி இருக்கிறீங்கள்? நான் இருக்கன். ஆனால் கொஞ்சம் வருத்தம் தான். ஓ! அப்ப நேரத்துக்கு சாப்பிட வேணும் மாமா ஹோட்டலுக்கு போவமே?

ஐயோ மருமோள் சாப்பாட்டுக்கடை ஒண்டும் வேண்டாம். நான் வெளிநாட்டில பாக்காத சாப்பாட்டுக்கடையா நீ காட்டப்போறா எனக்கு ஒருக்கா நாங்கள் முந்திச் சாப்பிட்ட குரக்கன் புட்டு அவிச்சித் தா? குரக்கன் புட்டா? எனக்கு செய்யத்தெரியாது மாமா. அக்கா உனக்கு செய்யத்தெரியுமா? எனக்கும் செய்யத்தெரியாது. மருமோள்மாரும் கொஞ்சம் வெளிநாட்டு கலாசாரத்துக்கு மாறீட்டாளவை போல

ம். சரி நான் சொல்ல நீங்கள் செய்யுங்கோ. குரக்கன் மா இருக்கா?

ஓம் வேண்டலாம் மாமா... சரி குரக்கன் மா 1 கிலோ எடுங்கோ. தேங்காயிலை ஒரு பாதியை அப்பிடியே துருவுங்கோ. வடிவா புட்டு அவிக்கிறது போல மாவை அவிச்சு உப்பு தேவையான அளவு கலவுங்கோ குரக்கன் மாவுக்குள்ள கொஞ்சம் சுடு தண்ணிய கொஞ்சமா விட்டு மாவ அகப்பையால கிளறு பிறகு சுண்டுப்பேணியால கொத்து... இப்ப குரக்கன் புட்டுக் கலவை ரெடி இப்ப அடுப்புல நீத்துப்பெட்டிய வைச்சு புட்டப்போடு.

இதில சுண்ணாம்புச்சத்து இருக்கு எலும்புமுறிவு. எலும்புதேய்மானம். எலும்பு சம்மந்தமான பிரச்சனைகள் ஒண்டும் வராது. இரத்தஅழுத்தம். கொலஸ்ரோல். நீரிழிவு போன்ற கண்டறியாத நோய்களும் வராது.

புட்டு மாதிரி வருமா மருமேள்? பாப்பம் வரும் என்டு தான் நினைக்கிறன். புட்டுக்கு மாமா நாட்டுக்கோழி குழம்பு நல்லா இருக்கும் .அதோட சொதியும் வைக்கிறன். ஓம் ஓம் குரக்கன் புட்டு கொஞ்சம் கரடுமுரடாக தான் இருக்கும் சொதி இருந்தா இன்னும் சுப்பராக இருக்கும்.

சரி நீங்க ஏன் குரக்கன் புட்டு சாப்பிட கேட்டனீங்கள். அப்பிடி என்ன இருக்கு அந்த குரக்கன் புட்டில? என்ன இருக்கு எண்டா கேக்கிறாய் அதுல எல்லாமே இருக்கு. நீரிழிவு நோயாளிகளுக்கு மட்டுமல்ல உடலில இருக்கிற இன்சுலினை சம நிலையில வைச்சிருக்க உதவுது. இதனால சக்கரேன்ர அளவும் சரியாக இருக்கும். இத சாப்பிட்டா குண்டா வரமாட்டாய் உடம்பும் அளவா இருக்கும்.

இதில சுண்ணாம்புச்சத்து இருக்கு எலும்புமுறிவு, எலும்புதேய்மானம், எலும்புசம்மந்தமான பிரச்சனைகள் ஒண்டும் வராது. இரத்தஅழுத்தம், கொலஸ்ரோல், நீரிழிவு போன்ற கண்டறியாத நோய்களும் வராது. உடனே சமிபாடடைஞ்சிடும், மலச்சிக்கல் வராது. சரி சாப்பிட்டு பாருங்கோவன் சும்மா அசந்து போயிடுவியள்.

தா சாப்பிடுவோம். அட அட என்ன அருமை. அங்க எவ்வளவுதான் பெரிய பெரிய சாப்பாட்டுக்கடைகள் இருந்தாலும் காசைக் கொட்டினாலும் இப்படி ருசியும் இருக்காது ஆரோக்கியமும் கிடைக்காது. அதுவும் என் மருமகள் சமைச்ச சாப்பாடு போல வருமே? என்ர மகன் உனக்குத் தான்.

சரி சரி சாப்பிடுங்கோ மாமா காணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுடி இலக்கியங்கள்

சோக்கிரட்டீஸ் பாணியிலே
சொல்லெல்லாம் கல்லாகி
மொக்குச் சமுதாயத்தின்
முகத்தைப் பதம்பார்க்கும்!

பாரதியார் பாணியிலே
பதில்கள் பிரம்பாகி
நரம்பில்லா நாக்குக்கு
நல்ல அடி கொடுக்கும்

கேலிகளின் பின்னாலே
கேள்வி காத்திருந்து
போலிகளின் முகமூடி
போர்வை கிழித்து நிற்கும்!

சிந்தனை தேன் சிந்தும்
தத்துவ மலர்த்தோட்டம்
செந்தமிழ் தாலாட்ட
சந்தமோ காலாட்டு!

மகுடி இலக்கியத்தே
பகுடி படுத்திருக்கும்!
பகுடி பின்னாலோ...
பழுத்த நெருப்பிருக்கும்!

ஒவ்வொரு பதில்களிலும்
ஓராயிரம் அர்த்தங்கள்
ஒன்றன் பின் ஒன்றாக
ஒளித்து விளையாடும்!

உயிருள்ள உவமைகொண்டு
உலகம் அளக்கவந்த
மகுடி இலக்கியங்கள்
மற்றொரு குறள் வடிவம்!



அரசாங்க வேலைதான்
வேண்டுமென்று அடம்
பிடித்துக்கொண்டு அரசியல்
வாதிகளுக்குப் பின்னால்
அலைந்த உன்
மகனுக்கு வேலை
கிடைத்துவிட்டதா?!

இல்லை..!
அப்ப, இப்ப அவன்
என்ன செய்கிறான்?
தனக்குப்பின்னாலை
பலரை நாயாய் அலைய
வைத்திருக்கிறான்!
அவனே ஒரு அரசியல்வாதி ஆகிவிட்டான்.

## கலாச்சரம்

ஒரு பானை
சோற்றுக்கு
ஒரு சோறு
பதம் என்பார்
இன்றெங்கள்
அரசியலில்
அம்பி என்றும்
அரசியென்றும்
நம்பி என்றும்
நம் கையென்றும்
எம் முன்னே
வைக்கும்
எடுத்துக் காட்டெல்லாம்
வேகாத அரிசியுங்கோ



**கடம்பதாசன்**

## மூர்த்திகரம்

உற்சவ மூர்த்தியிடம், மூலஸ்தானத்து மூர்த்தி சொன்னார். "உனக்கென்னப்பா அதிஷ்டக்காரன் தினம் தினம் ஒவ்வொரு வாகனத்தில் அலங்காரமாக ஊர்சுற்றி வருகிறாய் என் தலையெழுத்து ஒரேயிடத்தில் நிலையாக இருக்கவேண்டியிருக்கு..."

உற்சவ மூர்த்தி சலித்துக் கொண்டார்...

"உனக்கென்னப்பா நீ தான் அதிஷ்டக்காரன் இருந்த இடத்திலேயே, அபிஷேகம் ஆராதனை ராஜோப சாரம்... என் தலையெழுத்து மனிதர்கள் இழுத்த இழுப்புக் கெல்லாம் போய் தெருத்தெருவ திரிந்து உபசாரம் தேட வேண்டியிருக்கு...

மௌனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நாகரீகமங்கை:** ஐயோ...! மழை இந்தச் சுருக்குக் குடை அவசரத்திற்கு விரிக்க முடியவில்லையே.

**கிராமவாசி:** அது கிடக்கட்டும்... நீ வா பிள்ளை இந்த ஓலைக் குடைக்குள்ளே...



**கீழ்ப்பக்க சாரி நிலத்தில் உராய்ந்து பழுதாகின்றது. இந்த பாஷன் தான் சாரியைப் பாதுகாப்பாக வைத்திருக்கும்.**

# பின் சிரிப்பு






**டாக்டர்:** நான் தரும் மாத்திரைகளை நாள் ஒன்றுக்கு மூன்று தரம் சாப்பாட்டிற்குப் பின்பு போட வேண்டும்.

**நோயாளி :** டாக்டர்... நான் ஒரு நாளுக்கு ஒரு முறையே சாப்பிட வசதி உள்ளவன்

டாக்டர்: ?



**மோகன் :** நீர் உமது கணவனை விவாகரத்து செய்துவிட்டீராமே?

**கமலா:** ஆமாம்... பெரிய உத்தியோகத்தில் இருந்து கொண்டு இலஞ்சம் வாங்கத் தெரியவில்லையே.

மோகன் : ?



**ஒருவர்:** உங்க மச்சான் என்ன செய்கிறார்?

**மற்றவர்:** அவர் காலத்திற்கு ஏற்ற தொழில் செய்வதில் கெட்டிக்காரன் முன்பு செய்வினை சூனியம் செய்தவர். இப்போ கசிப்பு காய்ச்சிறார்.



**நண்பர்:** ஏன்டா எப்போ பார்த்தாலும் உன் மனைவியின் போட்டோவை விடமாட்டேன் என்கிறாய் அதே தியானம் போலிருக்கே.

**ஒருவர்:** போடா பைத்தியக்காரா எனக்கு என்றேனும் ஒரு நாள் வீட்டுக்கு போகவேணும் என்ற நினைவு வந்தால் அப்போ என் மனைவியின் போட்டோவைப் பார்ப்பேன் பிறகு வீட்டு நினைவே மறந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சை விட்டகலாத சிரித்திரன் சுந்தர்

சிரித்திரன் சுந்தரின் நினைவாக இலக்கியவிழா ஒரு முறை கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்றது. வழமையாக இத்தகைய விழாக்கள். கூட்டங்களுக்கு அடித்து விழுந்து ஓடும் சுபாவம் இல்லாத எனக்கு இந்த விழாவுக்குச் செல்ல வேண்டும் என்று ஒரு துடிப்பு.

இதற்கு காரணம் சுந்தரிடம் இருந்த உன்னதமான ஒரு பண்பு . மனிதத்திற்கு. மனித நேயத்துக்கு அவர் கொடுத்த முக்கியத்துவம் என்னை வெகுவாகவே கவர்ந்திருந்தது. நானும் அவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். ஆனால், ஓரிரு சந்தர்ப்பங்களில் அவர் வீதியால் நடந்து சென்றிருந்த போது தூர நின்று பார்த்திருக்கின் றேனேதவிர, பேசியதில்லை. பணத்துக்காக அங்கலாய் காத இன்னோரு பண்பும் அவரிடம் வேரூன்றியிருந்தது. அவருடன் பழகாவிட்டாலும் அதை அவரின் சிந்தனைகள் மூலம் எவராலும் எளிதில் புரிந்து கொள்ளமுடியும்.

பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் சிவஞான சுந்தரம். அவர் தனக்கு சூட்டிக்கொண்ட புனை பெயர் தான் சுந்தர். கரவெட்டியிலே மிகவும் ஒழுக்கக்கட்டுப் பாடும் கல்வியில் அக்கறையும் கொண்ட ஒரு குடும்பத்தில் பிறந்த சுந்தர், குடும்பத்தின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தான் ஒரு எழுத்தாளராக, கேலிச்சித்திரக் கலைஞனாக, சிந்தனையாளராக இந்தத் துறைகளில் அவர் புகுவதை அவரின் குடும்பத்தவர்கள் விரும்பி ஏற்றிருப்பார். என்று நான் நினைக்கவில்லை.

ஆனால், தன்னிடம் உள்ளார்ந்தமாக இருந்த திறமையில் நம்பிக்கை வைத்து துணிச்சலுடன் சுந்தர் செயற்பட்டதனால், அந்தக் குடும்பத்தவர்கள் சகலரிலும் பார்க்க ஜனரஞ்சகமான மனிதனாக அவரால் மிளிர முடிந்தது. அக்குடும்பத்தில் அதிகமானோர் கல்வியைப் பொறுத்தவரை ஒவ்வொரு அம்சங்களில் துறைபோனவர்கள். ஆனால் சிரித்திரன் சுந்தர்போல் மக்கள் மயமானவர் எவருமே அங்கில்லை.

1960களில் ஆரம்பத்தில் மேலதிகாரியுடனான மனத்தாக்கத்தையடுத்து அரசாங்க உத்தியோகத்தை துறந்த சுந்தர். பின்னர் சினிமா நிறவனத்தில் பணியாற்றினார். அங்கும் சில காலத்தில் பின்னர் மேற்பார் வையாளரோடு மோதலால் வேலையைத் துறந்தார். இனிமேல் எக்காலத்திலும் ஒருவரின் கீழ் வேலை பார்ப்பதில்லை என்ற முடிவோடு, தான் ஈடுபாடு கொண்டிருந்த பத்திரிகைத் துறையில் இறங்க முடிவு செய்தார். இதற்கெனக் கொழும்பு செல்லத் தீர்மானித்த போது, பொறுப்புணர்ச்சியில்லாத அவரோடு போக வேண்டாம் என்று தனது பெற்றோர் தன்னைத் தடுத்ததாக மனைவி திருமதி கோகிலம் சிவஞானசுந்தரம் நூலொன்றில் ஒரு சில வருடங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்ததை வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

கொழும்புவந்த குறுகியகாலகட்டதிலேயேசுந்தர தின் திறமை சுடர்விடத் தொடங்கியது. சவாரித் தம்பர், மைனர் மச்சான், ஸ்ரீமான் செல்லக்கிளி முதலிய கருத்துச் சித்திரங்கள் தினகரன், வீரகேசரி, மித்திரன், பத்திரிகைகள் மூலமாக வாசகர்களின் உள்ளங்களில் இடம்பிடித்தன. தினகரன் ஆசிரியராக இருந்த பேராசிரியர் கே.கைலாசபதி சுந்தரின் திறமையை தனது பத்திரிகையின் வளர்ச்சிக்காக அவருடன் இணைந்து பயணித்தார்.

பின்னர் 1963 இல் சிரித்திரனைத் தனது சொந்த இதழாக வெளியிட ஆரம்பித்தார் சுந்தர். 1971ஆம் ஆண்டு நாட்டில் தோன்றிய கலவரங்கள் காரணமாக சிரித்திரன் கொழும்பில் நிறுத்தப்பட்டு யாழ்ப்பாணத்தில் வெளியானது. 1987 இல் இந்திய அமைதி காக்கும் படை இலங்கை வந்தது தொடக்கம் 1990 மார்ச் இறுதியில் அப்படை வெளியேறும் வரையான காலகட்டத்தில் சிரித்திரன் வெளியாகவில்லை. பின்னர் உடல் நலம் குன்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்திரனை வெளிவரச் செய்தார் சுந்தர்.

1924 மார்ச் 03 இல் கரவெட்டியில் பிறந்த சுந்தர் 1995 ஆம் ஆண்டு அதே மாதம் அதே திகதியில் பிறந்த மண்ணிலேயே தன் இறுதி மூச்சை விட்டார். இதை செங்கையாழியான் சுந்தரின் ஒரு நூலுக்கான முன்னுரையில் குறிப்பிட்டுமிருக்கிறார்.

நாங்கள் இறந்த பின்னரும் எங்களைப் பற்றி மக்களைப் பேச வைக்க வேண்டும். பிறந்தோம். இருந்தோம் என்று இருக்கக் கூடாது என்று அடிக்கடி சொல்லி வந்த சுந்தர் தான் மறைவதற்கு முதல்நாள் கூட பேனாவும் தாளும் பெற்று எழுத முனைந்தார் கைகூடவில்லை. மனைவியாரைக் கேட்டார். அதுவும் கைகூடவில்லை என்று மனைவியார் கூறியிருக்கிறார். பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் தனது சிந்தனையால் மக்களைச் சிரிக்க வைத்த சுந்தரின் படைப்புகளை வெளியிடுவதில் காட்டப்படும் அக்கறை பெரிதும் மெச்சத்தக்கது.

தமிழ்ச்சங்கத்தில் அன்று நடந்த இலக்கிய விழாவில் கலைஞர்களுக்கு சுந்தர் நினைவு விருதுகளையும் வழங்கினார்கள். முதுபெரும் பத்திரிகையாளர் கலாசூரி ஆ. சிவனேசச்செல்வன் தலைமை தாங்கினார். மல்லிகை டொமினிக் ஜீவா, உடுவை எஸ்.தில்லை நடராஜா, பேராசிரியர் சோ.சந்திரசேகரம், வ.இராசையா மாஸ்டர் உட்பட பலர் பேசினர். ஹாசிம் உமர் நூல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தனது உரையின் அரைவாசிப்பகுதியை மகுடி- சிரித்திரன் சுந்தர் பதில்கள்' என்று அன்றைய தினம் வெளியிடப்பட்ட நூலை மேடையில் வைத்து வாசித்துக் காட்டுவதிலேயே செலவிட்டார். சுந்தரின் சிந்திக்க வைக்கும் பதில்கள் அவரை அன்று சிறைப்பிடித்து விட்டன என்பதை உணரக் கூடியதாயிருந்தது.

சிரித்திரன் சுந்தர் ஆழமான சிந்தனைகளை நகைச்சுவை உணர்வுடன் மக்கள் மனங்களில் பதியச் செய்வதில் எத்தகையதொரு ஜாம்பவான் என்பது இன்றைய இளைய சந்ததிக்குத் தெரியாது.

தூங்கிக் கிடந்த தமிழனை தட்டி எழுப்பியது யார் என்ற கேள்விக்கு, மகுடி பதிலில் சுந்தர் அன்று கூறியது இன்றும் எனக்கு நினைவிருக்கிறது. காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு செல்லும் இரவு மெயில் ரயிலில் அநுராதபுர ஸ்ரேசனில் வைத்து ஏறும் சிங்களவர்களே தூங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பியவர்கள் என்று அவர் பதில் அமைந்தது.

அந்தக் காலத்தில் மெயில் ரயிலில் பயணம் செய்த தமிழர்களுக்கு சுந்தரரின் அந்தப் பதிலின் ஆழமும், அர்த்தமும் புரியும்.




மகுடி- சிரித்திரன் சுந்தர் பதில்கள் நூலில் இருந்து சில கேள்வி, பதில்களை நானும் இங்கு தருகின்றேன். **இருந்தும் இல்லாதது எது?**

சமாதானத்துக்கு நோபல் பரிசு இருந்தும் சமாதானம் இல்லையே.

**இடதுசாரியைப் பற்றி வலதுசாரி என்ன நினைப்பான்?**

வலது குறைந்தவன் என்று நினைப்பான்.

**எவன் வாழ்க்கை வெற்றி? எவன் வாழ்க்கை தோல்வி?**

சூழ்நிலையின் கையாகுபவன் தோல்வியைத் தழுவுகின்றான். சூழ்நிலையைக் கைதியாக்குபவன் வெற்றியைத் தழுவுகின்றான்.

**மனிதனைத் தூஷிப்பவனால் கடவுளை நேசிக்க முடியுமா?**

கண்ணுக்குத் தெரியும் மனிதனை நேசிக்க முடியாதவனால், எப்படிக் கண்ணுக்குத் தெரியாத கடவுளை நேசிக்க முடியும்.

**மேல் நாட்டவரிடம் இன்றும் நிறத்துவேசம் இருக்கிறதா?**

பிறரைப் பார்ப்பானேன்? மாப்பிள்ளை கறுப்பா, சிவப்பா என்ற கேள்விகள் எம்மிடமே இன்றும் இருக்கிறதே.

**மொட்டைக் கடிதம் என்பது என்ன?**

உபத்திரம்

**கடவுள் பெண்ணைப் பார்த்து எப்போது சிரிக்கிறார்?**

தாய்ப்பாலை ஒளித்து, உலகத்திலுள்ள சத்துணவெல்லாம் பிள்ளைக்குக் கொடுக்கும் போது

**தப்புச் செய்யாத மனிதன் எங்கே வாழ்கின்றான்?**

கருவறையில்

**கடவுள் எப்போது சிரிக்கிறார்?**

ஆறடி மனிதன் 60 ஏக்கர் காணி வாங்கும் போது.

**இன்று அறிவையா, பணத்தையா மேலாக மதிக்கிறோம்?**

புத்தக வெளியீட்டு விழாக்களில் முதல் பிரதியைப் பணக்காரனைத்தானே வாங்க வைக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**G SYSTEM**
DREAM OF TECHNOLOGY

# EPOS SYSTEM

BASED ON HYBRID
AND
CLOUD TECHNOLOGY



**CCTV**
FOR OVERALL SECURITY



IP PBX SUITS TO YOUR BUSINESS COMMUNICATIONS AND IDEAL SOLUTIONS FOR INFORMATION TECHNOLOGY

VISIT - gsystems.co



PROVIDING ADVANCED TECHNOLOGY SERVICES AT AFFORDABLE PRICES

# ALARM SYSTEM

FOR COMPLETE PROTECTION

UK
0203 500 5944

FRANCE
018 488 5064

SWITZERLAND
031 528 16 79

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VISION NEXT 100 YEARS...

**EMPOWERING THE NATION**

# புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சியகம்

# Centre for Creativity and Innovation

**65 Velappar Lane, Stanly College Front Road,**

**Jaffna**

**E-mail : info@visionnext100years.org**

**Web : visionnext100years.org**

**+94 21 315 1140 | +94 75 741 7332**



[illegible] யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சியகம் CENTRE FOR CREATIVITY AND INNOVATION [illegible] 672B [illegible] Harikanan Printers [illegible] 2023 [illegible] ஆசிரியர் சி.சிவஞானசுந்தரம் (சிரித்திரன் சுந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org